# மாலை தீப்பொறி

MALAE THEEPORI





2023 நவம்பர் 1-15 தொகுதி 22 இதழ் 7

விலை ரூ.10 ஆண்டு சந்தா ரூ.200


# இஸ்ரேலே! பாலஸ்தீனத்தின் மீதான இனப் படுகொலைப் போரை நிறுத்து!!






# அரைகுறையான, கைவிடப்பட்ட சிங்கூர் திட்டத்திற்காக டாடா மோட்டார்ஸ் நிறுவனத்திற்கு இழப்பீடு என்பது மேற்கு வங்க மக்களுக்கு இழைக்கப்பட்ட கொடூரமான அநீதி

சிங்கூரில் அரைகுறையான, கைவிடப்பட்ட நானோ தொழிற்சாலைத் திட்டத்திற்காக இழப்பீடு கோரிய வழக்கில், செப்டம்பர் 1, 2016 முதல் மீட்புக் காலம் வரை ஆண்டுக்கு 11% வட்டியுடன் ரூ. 765.68 கோடி டாடா மோட்டார்ஸ் நிறுவனத்திற்கு வழங்க மூன்று பேர் கொண்ட நடுவர் மன்றம் உத்தரவிட்டுள்ளது. அந்தப் பணத்தை மேற்கு வங்க தொழில் வளர்ச்சிக் கழகம் (WBIDC) கொடுக்க வேண்டும்.


கைவிடப்பட்ட திட்டத்திற்காகவும் வீணாகிப்போன விவசாய நிலத்திற்காகவும் மேற்கு வங்க மக்கள் மேலும் கூடுதல் சுமையைச் சுமக்கவிருக்கிறார்கள். இதைவிட அபத்தமானது, தான்தோன்றித்தனமானது, அநீதியானது எதுவும் இருக்க முடியாது. பல பயிர்களும் விளையக் கூடிய வளமான நிலத்தை கையகப்படுத்துவதற்கு உள்ளூர் மக்கள் எதிர்ப்பு தெரிவித்ததன் காரணமாக சிங்கூர் திட்டம் கைவிடப்பட்டது. உள்ளூர் மக்கள் எதிர்க்கும் போது அவர்கள் மீது எந்த ஒரு திட்டத்தையும் திணிக்க முடியாது.

உண்மையில், மக்களின் எதிர்ப்பைச் சந்தித்த ஒரு திட்டத்திற்கு சிங்கூரும் ஓர் எடுத்துக்காட்டு. ஒடிசாவின் நியம்கிரி, கலிங்கநகர் மற்றும் போஸ்கோ முதல் தமிழ்நாட்டின் தூத்துக்குடியில் உள்ள ஸ்டெர்லைட் வரை, கட்டாய நிலம் கையகப்படுத்துதல், சுற்றுச்சூழல் சீர்குலைவு அல்லது பெரிய அளவில் இடம்பெயரச் செய்தல் ஆகியவற்றின் காரணமாக இதுபோன்ற எதிர்ப்பைச் சந்தித்த பல சமீபத்திய நிகழ்வுகள் இருக்கின்றன.

நானோ காரைப் பொறுத்தமட்டில், அந்தக் கார் பற்றிய யோசனையே கோளாறானதாகிவிட்டது. அவசரமாக குஜராத்திற்குக் கொண்டு செல்லப்பட்ட அந்தத் திட்டம் அங்கேயும்கூட தோல்வியடைந்து விட்டது. விளைச்சல்களை நாசப்படுத்தி, ஆயிரக்கணக்கானவர்களின் வாழ்வாதாரமான நிலங்களை, வாழ்வாதாரங்களை, வீடுகளை இழக்கச் செய்த ஒரு தவறான யோசனைக்காக, அரைகுறையான மற்றும் கைவிடப்பட்ட திட்டத்திற்காக இருபது ஆண்டுகளுக்குப் பிறகு மேற்கு வங்க மக்கள் பணம் கொடுக்க வேண்டும் என்று கூறுவது வெந்த புண்ணில் வேல் பாய்ச்சுவதாகும்.

நடுவர் மன்றத் தீர்ப்பு என்ற பெயரில் கார்பரேட்டுகளுக்கு கால்பிடிக்கும் இந்த வெட்கக்கேடான தீர்ப்பை மேற்கு வங்க மக்களும் அரசும் ஏற்க மறுக்க வேண்டும்.

**திபங்கர்**
**பொதுச் செயலாளர்**
**இகக(மாலெ) விடுதலை**



2023 நவம்பர் 1-15

மாலெ தீப்பொறி

இருவார இதழ்

தொகுதி 22 இதழ் 7

உள்ளே

உலக பசிக் குறியீட்டில் இந்தியா 4
தன் பாலின இணையர்களுக்கு அநீதி 6
கட்சி ஆவணம்-பொதுத் திட்டம்-இந்திய சமூகம் 8
ஏஐசிசிடியு 10வது மாநில மாநாடு 10
திண்ணைச் சில்லுகள் 16

முதன்மை ஆசிரியர்
வீ.சங்கர்

ஆசிரியர்
ஜி.ரமேஷ்

ஆசிரியர்குழு
பாலசுந்தரம்
பழ.ஆசைத்தம்பி
அ.சந்திரமோகன்
கே.ஜி.தேசிகன்

மேலாளர்
சொ.இரணியப்பன்

இந்திய கம்யூனிஸ்ட் கட்சி (மார்க்சிஸ்ட் – லெனினிஸ்ட்) தமிழ்நாடு மாநிலக்கமிட்டியின் அரசியல் ஏடு

1/10, 11ஆவது தெரு,
கருணாநிதி நகர்,
அயனாவரம், சென்னை – 23

நிர்வாக அலுவலகம்
3/254பி, ஜீவா தெரு,
வண்டலூர்
சென்னை – 600048

தொலைபேசி: 9443507067
9840340741

malaetheepori@gmail.com
www.tamilnadu.cpiml.net
cpimlthamilnadu.blogspot.com

தலையங்கம்

# மோடி அரசின் இரட்டை வேடமும் சதி வேலையும்

மனிதாபிமான அடிப்படையில் பாலஸ்தீனத்தின் மீதான போர் நிறுத்தப்பட வேண்டும், அனைத்து மக்களைக் காக்கவும் உடனடியாக உதவிகள் வழங்கிடவும் ஐ.நா.பொதுமன்றம் கொண்டு வந்த தீர்மானத்திற்கு ஆதரவாக வாக்களிக்காமல், நடுநிலை என்ற பெயரில் புறக்கணித்துள்ளது மோடி அரசு. காலங்காலமாக இருந்து வந்த, பாலஸ்தீன ஆதரவு இந்திய வெளியுறவுக் கொள்கைக்கு மாறாக பாலஸ்தீனத்திற்கு எதிராக, இஸ்ரேலுக்கு ஆதரவாக மோடி அரசு, எதிர்க்கட்சிகளைக் கலந்து பேசாமல், தன்னிச்சையாக இப்படியொரு முடிவு எடுத்தது கடும் கண்டனத்துக்குரியது. இனவெறி பிடித்த இஸ்ரேலுக்கு ஆதரவாக, அமெரிக்காவுடன் சேர்ந்து கொண்டு மதவெறி பிடித்த மோடி அரசு செயல்படுகிறது என்பதில் வியப்பில்லை என்றாலும், பல்லாயிரக் கணக்கான குழந்தைகளை, பெண்களைக் கொத்துக் கொத்தாக கொன்று குவித்துக் கொண்டிருக்கும் இஸ்ரேலுக்குக் கண்டனத்தைத் தெரிவிக்காமல் பாலஸ்தீன ஆதரவு தீர்மானத்தைப் புறக்கணித்துள்ளது மோடி அரசு. அதேவேளை, நாங்கள் எப்போதும் பாலஸ்தீனத்துடன்தான் நிற்கிறோம், இந்தியா பாலஸ்தீனத்திற்கு வேண்டிய அனைத்தும் செய்யும் என்று பாலஸ்தீன அதிபரிடம் தொலைபேசியில் மோடி பேசுகிறார். இன்னொருபுறம் இந்தியா மருந்துப் பொருள்களை பாலஸ்தீனத்திற்கு அனுப்பி வைக்கிறது. ஒரு பக்கம் இஸ்ரேலின் ஆயுத வியாபாரியான அமெரிக்காவுடன் கூட்டு இன்னொரு பக்கம் பாலஸ்தீன மக்களுக்கு மருந்து என்று இரட்டை வேடம் போடுகிறது மோடி அரசு. இரண்டாவது முறை ஆட்சிக்கு வந்த 2019ல் இஸ்ரேலைச் சேர்ந்த என்எஸ்ஓ நிறுவனத்தின் பெகாசஸ் என்ற மென்பொருள் மூலம் இந்திய எதிர்க்கட்சித் தலைவர்களை மட்டுமின்றி, உச்சநீதிமன்ற நீதிபதிகள், பத்திரிகையாளர்கள், பாஜகவின் அமைச்சர்களைக் கூட வேவு பார்த்தது மோடி அரசு. அந்த அளவிற்கு இஸ்ரேலுடன் நெருக்கத்தைக் காட்டும் மோடி அரசு நிச்சயமாக இஸ்ரேலுக்கு எதிராகச் செயல்படாது என்பது தெரிந்ததுதான் என்றாலும், இதுநாள் வரையுள்ள இந்திய வெளியுறவுக் கொள்கையை அப்படியே கிடப்பில் போட்டுவிட்டு தன் விருப்பம்போல் செயல்பட்டுள்ளது. இப்போது இந்தியாவில் உள்ள எதிர்க்கட்சித் தலைவர்களின் கைபேசிகள் வேவு பார்க்கப்படுகின்றன ஒன்றிய அரசின் ஆதரவினால் என்ற செய்திகள் வந்து கொண்டிருக்கின்றன. மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் பொதுச் செயலாளர் சீத்தாராம் யெச்சூரியின் ஐ–போன் கண்காணிக்கப்படுவதாக அவருக்கு ஐ–போன் நிறுவனமே மின்னஞ்சல் அனுப்பியுள்ளது. எதிர்க்கட்சித் தலைவர்களின் ஐ–போன்களை ‘அரசு ஆதரவு ஹேக்கர்கள்’ குறிவைப்பதாக ஐ–போன் நிறுவனமே செய்தி அனுப்பி எச்சரிக்கை செய்துள்ளது. 2019ல் இஸ்ரேலின் என்எஸ்ஓ நிறுவனம் பெகாசஸ் மென்பொருள் மூலம் ஒட்டுக் கேட்டது தொடர்பாக அமெரிக்காவின் கலிபோர்னியா நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்த போது, அந்த நிறுவனம் நாங்கள் யாரையும் கண்காணிக்கவில்லை, தரவுகளை அரசுக்குத்தான் விற்கிறோம் என்று சொன்னது. அப்போது என்எஸ்ஓ மூலம் தன் அரசுக்கு எதிரானவர்களைக் கண்காணித்ததாக சொல்லப்பட்ட மோடி அரசு இப்போது அரசு ஆதரவு ஹேக்கர்கள் மூலம் எதிர்க்கட்சித் தலைவர்களைக் கண்காணிக்கிறதோ என்கிற ஐயம் எழுகிறது.நாடாளுமன்றத் தேர்தல் நெருங்க நெருங்க, ஆர்எஸ்எஸ்– பாஜக-மோடி அரசாங்கத்தின் உள்ளடி வேலைகள் அதிகரித்துக் கொண்டிருக்கின்றன. ஒருபக்கம் அவர்களின் காவிப் பாசிச மதவெறி நிகழ்ச்சி நிரலை, ஐ.நா.மன்றத்தில் நடந்து கொண்டதுபோல் அதற்கொத்த செயல்பாடுகளை அதிகரித்துக் கொண்டே இன்னொரு பக்கம் ஜனநாயக விரோத சதிவேலைகளில் ஈடுபட்டு தனக்கெதிரான எதிர்ப்புக் குரல்களை முடக்கப் பார்க்கிறது மோடி அரசு. ஆனால், மக்கள் மன்றத்தில் மோடி வேலை எடுபடாது என்பதுதான் எதார்த்தம். ❑

# ஐந்தாவது பெரிய பொருளாதாரம், உலகப் பசிக் குறியீட்டில் 125 நாடுகளின் பட்டியலில் 111 வது இடத்திலுள்ளது

இஸ்ரேலின் இடைவிடாத குண்டு வீச்சாலும் அத்தியாவசியப் பொருட்களின் கொடூரத் தடையாலும் நிகழ்த்தப்படும் ஒரு இன அழிப்பு தொடர் தாக்குதலை, காஸாவின் கிட்டத்தட்ட 10 லட்சம் குழந்தைகள் எதிர் கொள்கிற போது, உலக பசிக் குறியீடு 2023 உலகம் முழுவதும் அதிகரித்து வரும் பசியின் வேதனை நோக்கி, நமது கவனத்தை ஈர்த்துள்ளது. ஆழமாக உட்பொதிந்துள்ள சமூகபொருளாதார காரணிகள், துரிதமாக மோசமாகி வரும் காலநிலை நெருக்கடி ஆகியவற்றோடு கோவிட் பெருந்தொற்று, ரஷ்யஉக்ரைன் போர் போன்ற சமீபத்திய நிகழ்வுப் போக்குகளின் சேர்க்கையே அச்சுறுத்தும் உலக பசி காட்சிகளுக்கு காரணம் என உபகு 2023 நம்புகிறது. தற்போது இஸ்ரேலின் இனப்படுகொலை முற்றுகையும் காஸா மீதான படையெடுப்பும் இன்றைய உலகில் ஒரு போரின் வடிவத்தில் பசி எப்படித் திணிக்கப்படும் என நமக்கு நினைவுறுத்துகிறது. ஒருவேளை உடனடியாக இஸ்ரேல் கட்டுப்படுத்தப் படாவிட்டால் காஸா மீதான போர் தொடர்ந்து தீவிரமானால் ரஷ்யஉக்ரைன், இஸ்ரேல்பாலஸ்தீன மோதல்களின் சேர்க்கை சாத்தியமான உலகப் போர் சூழலை நோக்கி இந்த உலகைத் தள்ளி, போரால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு பசியை கடும் பட்டினியாகவும், பஞ்சமாகவும் மாற்றி விடும்.

ஒரு பொதுவான தேக்க நிலையும், பசியை எதிர்த்துப் போரிடுவதில் பின்னடைவும் உள்ளதென உபகு 2023 அறிக்கை குறிப்பிடுகிறது. ஊட்டச்சத்து குறைபாடு (குழந்தைகளிடமும் பெரியவர்களிடமும்), வளர்ச்சி குன்றிய குழந்தை (நீடித்த ஊட்டச்சத்து குறைபாட்டைப் பிரதிபலிக்கும், ஐந்து வயதிற்கு கீழே உள்ள குழந்தைகளில் அவர்களது வயதுக்கேற்ற உயரமின்றி இருப்பவர்களின் சதவிகிதம்), நலிவுறும் குழந்தை (நீடித்த ஊட்டச்சத்து குறைபாடு காரணமாக ஐந்து வயதிற்கு கீழே உள்ள குழந்தைகளில் அவர்களின் உயரத்துக்கேற்ற எடையின்றி இருப்பவர்களின் சதவிகிதம்), குழந்தை இறப்பு (ஐந்து வயதிற்கு கீழே உள்ள குழந்தைகளின் இறப்பு விகிதம்) ஆகிய நான்கு காரணிகளின் ஒருங்கிணைந்த அளவாகவே பசி குறியீட்டெண் கணக்கிடப்படுகிறது. பசியின் பரவல், அளவு அடிப்படையில் உலக சராசரியான 18.3 ஐ விட மிக அதிகமான அளவாக 27.0 என்ற உபகு மதிப்பைக் கொண்டுள்ள தெற்காசியாவும், தென் சஹாரா ஆப்பிரிக்கப் பகுதியும் உலகின் மிகவும் மோசமாக பாதிக்கப்பட்டுள்ள இரண்டு பகுதிகளாகும்.

தெற்காசியாவின் இந்த ஆபத்தான நிலைக்கு மிகப்பெரிய பங்களிப்பாளராக, கடந்த பத்தாண்டுகளில் உபகு மதிப்புகளில் தொடர்ந்து சரிந்து வருகிற இந்தியாவே உள்ளது; வேறெவரும் அல்லர். இந்தியா 28.7 என்ற புள்ளிகளுடன் 125 நாடுகளின் பட்டியலில் 111 வது இடத்திலுள்ளது. இந்தியாவின் தெற்காசிய அண்டை நாடுகள் ஒவ்வொன்றும் இந்தியாவை விட குறிப் பிடத்தக்க அளவில் சிறப்பான நிலையில் உள்ளன. பாகிஸ்தான் உபகு 26.6 என்ற அளவுடன் 102 ஆவது இடத்திலுள்ளது. அதேவேளையில் நேபாளம் (உபகு 15.0), வங்கதேசம் (உபகு 19.0) ஆகியன குறிப்பிடத்தக்க முன்னேற்றத்தை அடைந்து முறையே 69வது, 81வது இடத்திலுள்ளன. உண்மையில் உபகு 13.3 என்ற அளவுடன் 60ஆவது இடத்திலுள்ள இலங்கை தெற்காசியாவிலேயே சிறந்த சாதனையை இன்னும் தக்க வைத்துக் கொண்டுள்ளது. உபகு நிர்ணயிக்கும் நான்கு காரணிகளுள் நீடித்த ஊட்டச்சத்து குறைபாட்டை பிரதிபலிக்கிற நலிந்து போகும் குழந்தை என்பதில் மிகவும் ஆபத்தான விகிதமான 18.7%ஐ இந்தியா கொண்டுள்ளது. 28.7 என்ற ஒட்டுமொத்த உபகு அளவானது, பசியால் பாதிக்கப்பட்டுள்ள நாடுகள் என்னும் தீவிர வகையினத்தில் இந்தியாவை வைத்துள்ளது. ஊட்டச்சத்து குறைபாடு என்பது பல லட்சக்கணக்கான இந்தியக் குழந்தைகளின் வளர்ச்சியைத் தடுப்பது மட்டுமல்ல; 58.1 சதவிகிதம் என்ற ஆபத்தான அளவுக்கு இந்தியப் பெண்கள் பல்வேறு மட்டங்களிலான இரத்த சோகை நோயினால் பாதிக்கப்பட்டு உள்ளனர்.

உபகு 2023 அறிக்கைக்கு மோடி அரசாங்கத்தின் எதிர்வினை என்பது உலகின் அனைத்து அறிக்கைகளுக்கும் அது தரும் வழக்கமான எதிர்வினைதான். ஆக்ஸ்ஃபேம் சமத்துவமின்மை அறிக்கை அல்லது ஊடக சுதந்திரம் அல்லது ஜனநாயகத்தின் வேறுபல குறியீடுகள் அல்லது அளவீடுகளில் இந்தியாவின்

ஆபத்தான வீழ்ச்சி குறித்த அறிக்கைகளாக இருப்பினும் இவையனைத்துக்கும் ஒரே எதிர்வினை தான். மோடி அரசாங்கம் எப்போதும் மறுத்தல் வழியிலேயே செயல்படுகிறது. மட்டுமல்ல இந்த அறிக்கைகளை அந்நிய அல்லது மேற்கத்திய சதிகள் என்பதாகக் கூறி இழிவுடன் ஒதுக்கித் தள்ளுகிறது. உபகு அறிக்கையில் தவறுகளை கண்டறியும் ஒரே நாடாக இந்தியா மட்டுமே உள்ளது. ஆனால் இந்த அறிக்கையின் ஆசிரியர்கள் மோடி அரசாங்கத்தின் ஆட்சேபணைகளுக்கு ஏற்றுக் கொள்ளத்தக்க மறுப்புகளை வழங்கியுள்ளனர். இந்த உபகு அறிக்கையில் பயன்படுத்தப் பட்டுள்ள தரவுகள் சம்பந்தப்பட்ட நாடுகள் குறிப்பிட்ட கால இடைவெளியில் வெளி யிட்டுள்ள புதுப்பிக்கப்பட்ட புள்ளி விவரங்கள் பல்வகை பலதரப்பு நிறுவனங்களின் ஆய்வுகள் உள்ளிட்ட சரிபார்க்கப்பட்ட மூலங்களில் இருந்து சேகரிக்கப்பட்டுள்ளன. இந்த உபகு இல் பெறப்பட்ட முடிவுகள் பசி மற்றும் உணவுப் பாதுகாப்பு குறித்த மற்ற உலக ஆய்வுகளின் மூலம் உறுதிப்படுத்தப்பட்டுள்ளன. பிரித்தானிய வாராந்திர ஏடு த எக்கனாமிஸ்ட் மூலம் ஒவ்வொரு ஆண்டும் வெளியிடப்படும் உலக உணவு பாதுகாப்பு குறியீட்டு (உஉபாகு) அறிக்கை 2021 இல் 113 நாடுகளுள் 71 வது இடத்தை இந்தியாவுக்கு வழங்கியுள்ளது. 57.2 புள்ளிகளுடன் அதே இடத்தில் அல்ஜீரியாவுக்கு இணையாக இந்தியா வைக்கப்பட்டிருக்கும் நிலையில் 74.2 புள்ளிகளுடன் சீனா 25 வது இடத்திலுள்ளது.

உபகு அறிக்கை ஊட்டச்சத்து குறைபாடு, வளர்ச்சி குன்றிய குழந்தை, நலிவடைந்த குழந்தை, குழந்தை இறப்பு ஆகியவற்றில் கவனம் குவிக்கும் அதேவேளையில், உஉபாகு அறிக்கை மலிவு விலை, கிடைப்பு, தரமும் பாதுகாப்பும், இயற்கை வளங்கள், மீண்டெழுந் திறன் போன்ற காரணிகளால் இயக்கப்படும் உணவுப் பாதுகாப்பு நடவடிக்கைகளின் அடிப்ப டையில் அமைந்துள்ளது. தற்போது இந்தியா வுக்கு உள்ள பிரச்சினை என்பது 62.3 புள்ளிகளுடன் 42 வது இடத்திலிருக்கும் உணவு கிடைப்பு என்பதிலல்ல; ஆனால் 59.3 புள்ளிக ளுடன் 80வது இடத்தை பிடித்திருக்கும் மலிவு விலை என்பது தான். மலிவு விலையின்மையை வலுவான பொது விநியோக முறையினாலும், பொதுமக்களின் வாங்கும் திறனை அதிகப்படுத்து வதன் மூலமும் மட்டுமே எதிர்கொள்ள முடியும்.

பசி, உணவு பாதுகாப்பின்மை குறித்த அதிர்ச்சி தரும் அறிக்கைகளை மோடி அரசாங்கம் மறுக்கும் அதேவேளையில் தேர்தல் நேரங்களில் 80 கோடி மக்களுக்கு 'இலவச அத்தியாவசியப் பொருட்களை' விநியோகிப்பதாகக் கூறி அதனைத் தனது மிகப்பெரிய சாதனையாக முன்னிலைப் படுத்துகிறது. இந்தக் கூற்றே, பசி, உணவு பாதுகாப்பு குறித்த உலக அறிக்கைகளால் வெளிப்படுத்தப்பட்ட இந்தியாவின் படுமோச மான செயல்திறனுக்கு மிகப்பெரிய அதிகாரபூர்வ சாட்சியமாக விளங்குகிறது.

சமத்துவமின்மை, பசி, இந்தியத் தொழிலா ளர்களின் நிலை குறித்து கவனம் குவிக்கும் அறிக்கைகளை ஒருவர் கண்டாலே போதும், ஜி20 உச்சி மாநாடு, உலகின் அய்ந்தாவது பெரிய பொருளாதாரம் என்பவற்றை சுற்றி உருவாக்கப் பட்ட, ஊதிப் பெரிதாக்கப்பட்ட மிகை விளம்பரங்களின் பொய்த்தன்மை அம்பலமாகி விடும். மக்கள் தொகையில் செய்யப்படும் மாற்றத்திற்கேற்ற பொருளாதார வளர்ச்சி (டெமோகிராபிக் டிவிடெண்ட்), பெண்களுக்கு அதிகாரமளித்தல் ஆகியவற்றை இந்த அரசாங்கம் தொடர்ந்து பேசுகிறது. இந்த உபகு அறிக்கை, இந்தியக் குழந்தைகள், இளம் பெண்களின் மோசமான உடல் ஆரோக்கியம் குறித்து வெளிச்சம் போட்டு காட்டுகிறது. இதோடு வேலைகளேயற்ற நிலைமைகளால் ஏற்பட்ட இருண்மையும், இந்திய இளம் வேலை செய்யும், வேலை தேடும் மக்கள் பிரிவினரின் நிச்சயமற்ற (வாழ்)நிலைமைகளும் சேரும் போது, இந்திய மக்கள் எவ்வாறு முறைப்படுத்தப்பட்ட விதத்தில் வறுமையில் தள்ளப்படுகிறார்கள், பாழாக்கப்ப டுகிறார்கள் என்பது நமக்குத் தெரிய வரும். இந்திய மக்களின் உணவு பெறும் உரிமையும், திறன்மிக்க அனைத்தும் தழுவிய உணவு பாதுகாப்பும், 'அத்தியாவசியப் பொருட்களின் இலவசம்' என்ற பெயரில் வாக்குகளை சேகரிக்க எண்ணும் அரசாங்கத்தின் இழி செயலாக மாற்றப்படலாகாது. உணவுப் பாதுகாப்பு செயல்திட்டங்களை தொடர்ந்து புறக்கணித்தால் அது இந்தியாவை மேலதிக பேரழிவுக்கு இட்டுச் செல்லும் என்றே உபகு அறிக்கையும், உஉபாகு அறிக்கையும் நமக்கு கூறுகின்றன.

எம்எல் அப்டேட் தலையங்கம் 17–23 அக். 2023

**தமிழாக்கம் – செந்தில்**

# தன் பாலின இணையர்களுக்கு இழைக்கப்பட்டுள்ள அநீதி

ரமேஷ் கணபதி

*சமீபத்தில் உச்ச நீதிமன்றம் பால் புதுமையர் என்றழைக்கப்படும் எல்ஜிபிடிக்யூஐயினரின் உரிமைக்கு எதிராக ஒரு தீர்ப்பை வழங்கி அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. தன் பாலின திருமணத்தை அங்கீகரிக்க வேண்டும் என்பதற்காக பால் புதுமையர் சமூகத்தைச் சேர்ந்த 15 இணையர்கள் உச்ச நீதிமன்றத்தில் வழக்குத் தொடுத்திருந்தார்கள். அந்த வழக்கில் தீர்ப்பு தங்களுக்குச் சாதகமாக இருக்கும் என்று அவர்கள் எண்ணிக் கொண்டிருந்த நிலையில் அவர்களின் உரிமைகளைப் பறிக்கின்ற வகையில் அதிர்ச்சியளிக்கும் விதத்தில் தீர்ப்பு வழங்கப் பட்டுள்ளது.*

*நீண்ட சட்டப் போராட்டத்திற்குப் பின்னர் 2018 செப்டம்பரில் உச்ச நீதிமன்றம் பிரிவு 377ஐ ரத்து செய்தது. தன் பாலினச் சேர்க்கையானது குற்றமாகாது என்று கூறியது. பால் புதுமையர், தன் பாலினச் சேர்க்கை உறவுகள் மனநலக் கோளாறு ஆகாது என்றும் ஒருவரது உடல் உறவுகள் அவரவர் விருப்பம் என்றும் இந்த அடிப்படையில் பாகுபாடு காட்டுவது ஒருவரின் உரிமையை மீறுவதாகும் என்று கூறியிருந்தது. அப்படிப்பட்ட சூழ்நிலையில்தான், பால் புதுமையர், எல்ஜிபிடிக்யூ சமூகத்தினர் தங்களின் தன் பாலின திருமணத்திற்காகவும் அந்த இணையர்கள் குழந்தைகளைத் தத்து எடுத்து வளர்ப்பதற்காகவும் உரிமையும் அங்கீகாரமும் கோரி வழக்குத் தொடுத்திருந்தார்கள். திருமணமான தம்பதியர்க்கு, இணையர்க்கு வழங்கப்படும் உரிமைகள் தங்களுக்கும் வேண்டும் என்று அவர்கள் கேட்டதற்கு, மத அமைப்புகள் கடும் எதிர்ப்புகள் காட்டின. மத அமைப்புகள் மட்டுமின்றி, ஒன்றிய அரசும் அவர்களின் கோரிக்கைக்கு எதிராக நின்றது. இந்த நிலையில்தான் தற்போது உச்சநீதிமன்றத்தின் 5 பேர் அமர்வு ஒரு தீர்ப்பினை வழங்கியுள்ளது.*

*அந்தத் தீர்ப்பில், தன் பாலின இணையர் திருமணம் செய்து கொள்வதால் ஏற்படும் பயன்களை விளக்கியிருக்கிறார்கள். ஆனால், அத்தகைய திருமணத்தைச் செய்து கொள்ளவோ, சேர்ந்து வாழவோ ‘அடிப்படை உரிமை இல்லை’ என்று குறிப்பிடப்பட்டுள்ளது மிகுந்த எதிர்பார்ப்புடன் இருந்தவர்களுக்கு பெரும் ஏமாற்றத்தை அளித்துள்ளது. சுப்ரியோ எதிர் இந்திய ஒன்றிய அரசு என்ற வழக்கில்தான் இந்த தீர்ப்பை உச்ச நீதிமன்றம் தற்போது இவ்வாறு வழங்கியுள்ளது. பால் புதுமையர் அல்லது எல்ஜிபிடிக்யூஐயினர் திருமணம் செய்து கொள்ளவோ, குழந்தையைத் தத்து எடுக்கவோ அடிப்படை உரிமை இல்லை என்று கூறியுள்ளது. தன் பாலினத் திருமணத்தை அங்கீகரிக்க முடியாது என்று கூறியிருப்பது அவர்களது குடியுரிமை மற்றும் இதர உரிமைகளையும் மறுத்துள்ளதாகும். ஒரு பாதுகாப்பற்ற நிலையை அச் சமூகத்தினருக்கு ஏற்படுத்தியிருக்கிறது.*

*ஐந்து நீதிபதிகள் கொண்ட அமர்வில், தலைமை நீதிபதி டி.ஒய்.சந்திரசூட் மற்றும் எஸ்.கே.கவுல் இருவரும் சிறுபான்மையினராகவும் மற்ற மூவரும் பெரும்பான்மையினராகவும் தீர்ப்பு வழங்கப் பட்டுள்ளது. தற்போதைய தலைமை நீதிபதி சந்திரசூட் அவர்கள்தான், 2018ஆம் ஆண்டு ஷபின் ஜகன் எதிர் அசோகன் (2018) எஸ்சிசி 368 வழக்கில், ‘திருமணம் ஒருவரின் தனிப்பட்ட உரிமையாகும். ஒருவர் யாரைத் திருமணம் செய்து கொள்ள வேண்டும் என்பது அவரது சுய விருப்பம் சார்ந்தது ஆகும். இது இந்திய அரசியல் சாசனம் பிரிவு 21ன் கீழ் ஒருங்கிணைந்ததாகும்’ என்று கூறியிருந்தார். தற்போது வழங்கப்பட்டுள்ள தீர்ப்பிலும் கூட தலைமை நீதிபதி அவர்கள், “ஓர் உறவு பாரபட்சமாக நடத்தப்படும் எனில், ஒரு வாழ்க்கைத் துணையைத் தேர்ந்தெடுப்பதற்காகன சுதந்திரம் மற்றும் அவர்களுடைய தோழமையால் இன்புறு வதற்கான சுதந்திரம் ஆகியன பயனற்றுப் போகும்” கூறியுள்ளார்கள். தன்னுடைய முந்தையத் தீர்ப்பில் கூறியுள்ளது போல், ஒருவர் தனது துணையைத் தேர்ந்தெடுப்ப தற்கான திறன் மற்றும் ஒன்றாகச் சேர்ந்து வாழ்க்கையை அமைப்பது ஆகியவற்றை அரசியல் சாசனப் பிரிவு 21ம் சமத்துவத்திற்கான உட்பிரிவு உள்ளிட்ட இதர பிரிவுகளும் வரையறுத் துள்ளதை இந்தத் தீர்ப்பிலும் அவர் அங்கீகரித்துள்ள அதேவேளை, தன் பாலின இணையர்கள் திருமணம் செய்து கொள்வதற்கான உரிமை உள்ளது என்று குறிப்பிடாமல் விட்டு விட்டார். அதாவது, இரு பாலினத்தவர்கள் அல்லாத, ஒரே பாலினத்தவர்கள் திருமணம் செய்து கொள்வதை சிறப்புத் திருமணச் சட்டம் அனுமதிக்கவில்லை என்றால் அது அரசியல் சாசனத்திற்கு எதிரானது என்று குறிப்பிட மறுத்து விட்டுள்ளார்.*

*தலைமை நீதிபதி டி.ஒய்.சந்திரசூட் மற்றும் எஸ்.கே.கவுல் இருவரும், தன் பாலின காதல் இயற்கையானது, காலங்காலமாக நடை முறையில் இருந்து வந்துள்ளது, இன்று அனைத்து பிரிவின ரிடமும் இத்ததைய வழக்கம் உள்ளது, இத்தகைய*

உறவுகள் மேல் தட்டுப்பிரிவினரிடம் மட்டுமல்ல அடித்தட்டு மக்களிடத்திலும் நகர்புறம், கிராமப்புறத்திலும் காணப்படுகின்றன என்று தங்களது சிறுபான்மைத் தீர்ப்பில் கூறியுள்ளார்கள். மேலும் இந்த உறவை, இதுபோன்ற நிலையான உறவில் இருந்து கிடைக்கும் உரிமைகளையும் அரசு அங்கீகரிக்க வேண்டும் என்று குறிப்பிட்டுள்ளார்கள். இப்படியெல்லாம் குறிப்பிட்டுவிட்டு, அந்த பால் புதுமைச் சமூகத்தினரின் திருமணத்தை அங்கீகரிப் பதற்கான வாய்ப்பை, அமைச்சரவைக் குழுவிடம் விட்டுவிட்டார்கள் என்பதுதான் வேதனைக்குரியதாகும்.

திருமணம் என்பது ஒருவரின் அடிப்படை உரிமை என்பதே இப்போது மறுக்கப்பட்டுள்ளது. திருமணம் என்பது அவர்களின் அடிப்படை உரிமை என்பதை மறுத்துவிட்டு தன் பாலின இணையர்களுக்கு சில துணைச் சலுகைகளை வழங்கக் கூறியுள்ளார் தலைமை நீதிபதி சந்திரசூட் அவர்கள். அதாவது, ரேசன் அட்டை வழங்குவது, கூட்டாக வங்கிக் கணக்கு துவங்குவதற்கான வசதி, இத்தகைய வங்கிக் கணக்குகளில் இருந்து பணத்தைப் பெறுவதற்கான உரிமை பெற்ற நபராக (நாமினி) இவர்களது பெயரை அளிப்பதற்கான உரிமை, மருத்துவ நடைமுறைகளின் போதும் சிறைச்சாலைகளுக்குச் சென்று சிறைவாசிகளைப் பார்க்கப்போகும் போதும் இவர்களை உறவினர்களாகக் கருதும் உரிமை, இறந்துபோன வாழ்க்கைத் துணையின் உடலைப் பெறுவதற்கான உரிமை, இறுதிச் சடங்குகளைச் செய்வதற்கான உரிமை ஆகியவற்றை அளித்திட அரசால் அமைக்கப்படும் குழுவிற்கு ஆலோசனைகள் வழங்கியுள்ளார்கள்.

தன் பாலின இணையர்களுக்கு பாதுகாப்பு அளிக்க வேண்டும் என்றும் இவர்களுடைய குடும்ப உறுப்பினர்கள் இவர்களுக்குத் தொல்லை கொடுப்பதைத் தடுத்து பாதுகாப்பு வழங்கிட வேண்டும் என்றும் தேவைப்பட்டால் அவர்கள் தங்குவதற்கு பாதுகாப்பு இல்லங்கள் அமைத்துக் கொடுக்க வேண்டும் என்றும் அரசுக்கும் காவல் துறைக்கும் வழிகாட்டுதல்கள் வழங்கியுள்ளார்கள். ஆனால், பெரும்பான்மை தீர்ப்பை வழங்கியுள்ள நீதிபதி பட், நீதிபதி ஹிமா கோலி மற்றும் நீதிபதி நரசிம்மா ஆகியோர் இந்த ஆலோசனைகளைக் கூட வழங்கத் தயாராக இல்லை. நீதிபதி சந்திரசூட் அவர்கள், பால் புதுமையர் உட்பட திருமணம் ஆகாத இணையர்கள் குழந்தைகளைத் தத்து எடுக்கலாம் என்று கூறியுள்ளார். சிறுபான்மைத் தீர்ப்பு இதையே கூறுகிறது. கேரா (CARA) சுற்றறிக்கை திருமணமாகாமல் சேர்ந்து வாழும் இணையர்கள் தத்தெடுக்கத் தகுதியற்றவர்கள் என்று கூறியது அரசியல் சாசனப் பிரிவு 15ஐ மீறுவதாகும் என்று குறிப்பிட்டுள்ளார்கள். ஆனாலும், குழந்தைகளைத் தத்தெடுக்கும் இந்த உரிமையும் பெரும்பான்மை நீதிபதிகளின் தீர்ப்பால் பறிபோய்விட்டது.

பெரும்பான்மை நீதிபதிகளின் தீர்ப்பு ஒட்டுமொத்தமாக அரசியல் அமைப்பு சாசனத்திற்கு எதிராக, இந்த பால் புதுமையினருக்கு உரிமைகளே இல்லை என்பதாக இருக்கின்றது என்றால், சிறுபான்மை நீதிபதிகளின் தீர்ப்பானது, வரும்... ஆனா வராது... என்பது போல் உள்ளது. இது திருநங்கையர்களாக, திருநர்களாக இயல்பிலேயே இருக்கின்றவர்கள் சமூகத்தில் சந்தித்துக் கொண்டிருக்கும் பிரச்சினைகளுக்கு தீர்வு கிடைப்பதற்கு மாறாக, மேலும் அவர்கள் சிக்கல்களைச் சந்திக்கின்ற நிலையை உருவாக்கி யுள்ளது.

புராணங்களில், இதிகாசங்களில் தன் பாலினத் திருமணங்களை ஏற்றுக் கொள்ளும் இச் சமூகமும், மதவாதிகளும் நடைமுறை எதார்த்தத்தில் இந்த தன் பாலின இணையர்களை அங்கீகரிக்க மறுக்கின்றனர். திருநங்கையும் திருநம்பியும் திருமணம் செய்து கொள்ளலாம் என்கிறது உச்ச நீதிமன்றத்தின் தீர்ப்பு. அதாவது ஆணாக அறிப்பட்டவர்கள், பெண்ணாக அறியப்பட்டவரைத் திருமணம் செய்து கொள்ளலாம். மாற்றுப் பாலினத்தவரைத் திருமணம் செய்து கொள்ளலாம் என்கிறது. ஒரே பாலினத்தவர்கள் திருமணம் செய்து கொள்வதை, தத்து எடுப்பதைத் தடுக்கிறது. தன் பாலினத்தவர் திருமணம் செய்து கொள்வது பற்றி அரசுதான் முடிவெடுக்க வேண்டும் என்றும் திருமணம் அடிப்படை உரிமையில்லை என்றும் கூறியிருப்பது, தன் பாலினத் திருமணத்தை மட்டுமின்றி, காதல் திருமணத்தை, கலப்புத் திருமணத்தைக் கூட எதிர்க்கும் மதவெறிச் சக்திகள் ஆட்சியில் இருக்கும் போது, அவர்கள் கையில் முடிவெடுக்கும் அதிகாரத்தை உச்சநீதிமன்றம் விட்டுவிட்டுள்ளதானது காவிப் பாசிசத்தின் பிடிக்குள் உச்ச நீதிமன்றமும் சிக்கிக் கொண்டுள்ளது என்பதைத் தெளிவாகக் காட்டுகிறது.

பால் புதுமையினர் எல்ஜிபிடிக்யுஐ சமூகத்தினர் இயல்பானவர்கள், இயற்கையானவர்கள். அவர்கள் இயற்கைக்கு மாறானவர்கள் அல்ல. இயற்கைக்கு மாறானவர்கள் என்று மதவாதிகள் கற்பித்துக் கொண்டிருக்கிறார்கள்.

இச் சமூகத்தினர் தங்களுக்கான உரிமைகளைப் பெறுவதற்கு, திருமணம், தத்தெடுத்தல் உள்ளிட்ட அடிப்படை உரிமைகளை வென்றெடுப்பதற்கு, அதற்குரிய சட்டத்தை உருவாக்குவதற்கு முற்போக்கு, ஜனநாயக சக்திகள் எப்போதும் துணை நிற்கும், நிற்க வேண்டும். ❑

# இகக(மாலெ)விடுதலை – 11ஆவது காங்கிரஸ் ஆவணம்
# பொதுத் திட்டம்

– பகுதி 2 –

2023 அக்.1–15 இதழின் தொடர்ச்சி...

## இந்திய சமூகம்

இந்தியா எழுந்து வரும் ஆசிய சக்தி என விவரிக்கப்பட்டாலும், இந்த பூமியிலுள்ள பெருமளவு ஏழைகளின் இருப்பிடமாகவே இன்னும் இருக்கிறது. இந்திய பெருந் தொழில் குழும முதலாளிகள், உலகெங்கும் அவர்களுடைய இறக்கையை விரித்து வான் வெளிகளில் பறந்து கொண்டிருக்கிறார்கள். ஆனால், நமது நாடு இன்னும், உலக பட்டினிக் குறியீட்டிலும் மனிதவள மேம்பாட்டுக் குறியீட்டிலும், பரிதாபகரமான தனிநபர் வருமானத்துடன், தரவரிசையில் மிகவும் கீழ் நிலையில் உள்ளது.

ஒரு சிறிய மேல்மட்டபிரிவினர், தங்கு தடையற்ற செல்வக் குவிப்பிலும், பளிச்செனத் தெரியும் படாடோப நுகர்விலும் திளைத்துக் கொண்டிருக்க, எல்லா செல்வத்தையும் உற்பத்தி செய்யும் அடித்தளமாக உள்ள ஒரு பெரும் பிரிவினர் அனைத்தும் பறிக்கப்பட்டு இருண்ட அடி ஆழத்தில் சிக்கிக் கொண்டுள்ளார்கள். இந்தக் குரூர வேறுபாடு மிகவும் தாறுமாறான ஒரு வளர்ச்சிப் போர்த்தந்திரத்தால் ஏற்பட்ட விளைவாகும். மிகப் பெரும்பான்மையான மக்களுக்கு வேலைவாய்ப்புக்கும் பிழைப்புக்கும் இப்போதும் ஆதாரமாக இருப்பது விவசாயம் தான். ஆனால், அது மேலோங்கிய அரை நிலப்பிரபுத்துவ சிறுவீத விவசாயப் பொருளாதாரத்தால் அழுத்தப்பட்டு, நிலப்பிரபுத்துவ பாதை வாயிலாக, முதலாளித்துவத்திற்கு மாறிச் செல்லும் ஒரு நீடித்த நெருக்கடிக்குள் சிக்கியுள்ளது. மேலும், ஊழல் அதிகாரிகள், அரசியல் தாதாக்களுடன் கள்ளக்கூட்டு வைத்துக்கொண்டு வணிக நோக்கத்திற்காக, மூர்க்கத்தனத்துடன் நிலப்பறியில் ஈடுபடும் நிலக் குற்றக் கும்பல் தோற்றத்தின் மூலம் விவசாயம் சரிய விடப் பட்டுள்ளது. பெரும்பாலான மரபுவழித் தொழில்கள் தேங்கி நிற்கின்றன. ஏற்றுமதிச் சந்தைகள், அயல்நாட்டுச் சந்தைகளுக்கான அல்லது மேட்டுக்குடியினர் நுகர்வுக்கான துறைகளே முன்னேற முடிகிறது. வளர்ச்சியின் இயந்திரங்களாக ஊகவணிக நடவடிக்கைகளும் ரியல் எஸ்டேட் துறைகளும் முன்னுரிமைப் படுத்தப்படுகின்றன; நம் நாட்டின் இயற்கை வளங்களும், மனித வளங்களும் பெருந் தொழில்குழும-ஏகாதிபத்தியச் சூறையாடலுக்கு அதிகரித்த அளவில் ஆட்படுத்தப்படுகின்றன.

விவசாயம் உட்பட எல்லாத் துறைகளிலும் துரிதப்படுத்தப்பட்ட, அனைத்தும் தழுவிய மூலதன ஊடுருவல் நடைபெறுகிறது. இந்த மூலதன ஊடுருவலானது, உற்பத்தி உறவுகளிலும் விழுமிய முறைகளிலும் விடாப்பிடியாய் இருக்கின்ற நிலப்பிரபுத்துவ மிச்சசொச்சங்களை ஒழிக்காமல், அவற்றைப் பயன்படுத்திக் கொண்டே நடக்கிறது. அதன்மூலம் நிலப்பிரபுத்துவ மிச்சசொச்சங்கள் புதிய வடிவங்களில் மறு உற்பத்தி செய்யப்படுகின்றன. இதுபோன்ற எச்சங்கள், பெருமூலதனத்திற்கு மலிவான உழைப்புச் சக்தியையும், மூலப்பொருட்களையும் வழங்குவது மட்டுமின்றி, விடாப்பிடியான பலவகை இருண்மைவாத, குறுகிய கருத்துகள், பல நேரங்களில் காட்டுமிராண்டித்தனமான வடிவங்கள் எடுக்கும் திட்டமிட்ட சாதிய, நிலப்பிரபுத்துவ ஆணாதிக்க ஒடுக்குமுறைக்கு, ஒரு கட்டமைக்கப்பட்ட அடித்தளத்தை வழங்குகின்றன. சுருங்கச் சொன்னால், தேசத்தின் பொருளாதார வாழ்வுத் தடங்கள், நாடாளுமன்ற ஜனநாயக நிறுவனங்கள் ஆகியவற்றின் மீது அதிகரித்து வரும் பெருந்தொழில் குழும கட்டுப்பாட்டோடு, குறிப்பாக அதி உயர் தனிச் சலுகை பெற்றுள்ள அரசு சலுகைசார் முதலாளிகளோடு சேர்ந்து கொண்டு, (இந்த) நிலப்பிரபுத்துவ மிச்ச சொச்சங்கள், உற்பத்தி சக்திகளின் வளர்ச்சியை முடக்குகின்றன; சிதைக்கின்றன. இந்திய சமூகத்தையும் ஆட்சி அமைப்பு முறையையும் ஒரு முற்றூடான ஜனநாயகமயப் படுத்துதலுக்கு மிகப் பெரிய தடைக்கற்களாய் இருக்கின்றன.

பொருளாதார வல்லமை வளர்ந்து வந்தாலும், ஆளும் அதிகாரத்துவ ஏகபோக முதலாளித்துவம், அரசியல்ரீதியாக, தனது தோற்றகால தரகுத் தன்மையை, தக்க வைத்துக் கொண்டுள்ளது. அது ஏகாதிபத்தியம் அல்லாத பல எல்லா வகைப்பட்ட நாடுகளுடனும், நெருக்கமான பொருளாதார உறவுகளை வளர்த்துக் கொண்டுள்ளது. பல பன்னாட்டு மன்றங்களிலும், பொருளாதாரக் கூட்டமைப்பு

களிலும் பங்கேற்கிறது. வெவ்வேறு அந்நிய சக்திகளுடன் பேரம் பேசுவதற்கான கணிசமான ஆற்றலைக் கொண்டுள்ளது. அது அண்டை நாடுகளிலும் அதற்கு அப்பாலும் தனது பொருளாதார விரிவாக்கவாத பேரவாக்களுக்கு சேவை செய்ய, கனிம மற்றும் எண்ணெய் வளங்களுக்காகப் போட்டியிட, கணிசமான அளவு மூலதன ஏற்றுமதியில் ஈடுபடுகிறது. ஆனபோதும் இவை அனைத்தும் ஏகாதிபத்தியத்தைச் சாரமாகச் சார்ந்திருப்பது என்ற வரையறைக்குள் தான் செயல்படுகின்றன. இது நுண்தளத்தில் வெவ்வேறு தொழில்நுட்ப, நிதி மற்றும் விற்பனைப் பிணைப்புக்களாகவும் ஒட்டுமொத்த (மேக்ரோ) தளத்தில் நவதாராளவாத பொருளாதார சித்தாந்தத்தை முழுமையாக ஏற்றுக் கொள்வதிலும் ஏகாதிபத்திய சதிகளுக்கு கீழ்படியும் அரசுக் கொள்கையிலும் மிக முக்கியமாக வெளிப்படுகிறது.

இது ஏகாதிபத்திய ஆதிக்கத்திற்குட்பட்ட பல்தள முகாமைகளும் பெரும் அந்நிய சக்திகளும் நமது உள்நாட்டு பொருளாதார அரசியல் விவகாரங்களிலும் கொள்கை விசயங்களிலும் அப்பட்டமாக தலையிடவும் 'போர்த்தந்திரக் கூட்டுகள்' என்ற போர்வையில் தமது புவிசார் அரசியல் விளையாட்டுக்களில் ஓர் இளநிலைக் கூட்டாளியாக செயல்படுமாறு இந்தியாவை இழுக்கவும் வழிவகை செய்கிறது. இப்படியாக நமது இறையாளுமைமிக்க தேர்வுரிமைகள், முன்னுரிமைகள் மீது பெரும் செல்வாக்கு செலுத்துகின்றன; கட்டுப்படுத்துகின்றன.

துரிதமான பொருளாதார வளர்ச்சியை ஊக்குவிப்பது என்ற பெயரால் ஆளும் வர்க்கங்கள், கார்ப்பரேட்டுகளின் கொள்ளையை எளிதாக்கும் வகையில் அரசின் பாத்திரத்தை மறுவடிவமைப்பு செய்யக் கூடிய ஒரு போர்த்தந்திரத்தை ஏற்றுக் கொண்டுள்ளன. அதாவது உற்பத்தியிலும் விநியோகத்திலும் அரசின் நேரடிப் பங்களிப்பை கடுமையாகக் குறைத்துக் கொள்வது, மக்களின் அடிப்படை நலன்களை உத்திரவாதப்படுத்தும் அரசின் பொறுப்பைத் துறந்துவிடுவது, பொருளாதாரத்தின் கடிவாளத்தை அரசிடமிருந்து, சந்தை சக்திகளை வழிநடத்தும் பெருமூலதனம் மற்றும் அந்நிய நிறுவனங்களோடு நெருக்கமான உறவுடன் செயல்படும் பெரிய இந்திய நிறுவனங்களிடத்தில் ஒப்படைப்படைத்து விடுவது. அரசால் ஊக்கப்படுத்தப்பட்டு அமல்படுத்தப்படும் இம் மாதிரியான வளர்ச்சியானது, முன்னெப்போதும் இல்லாத அளவிற்கு வேலையில்லாத் திண்டாட்டத்தை ஏற்படுத்துகிறது. சிலர் கைகளில் பிரம்மாண்டமாக செல்வம் குவிவதற்கும் பணக்காரர்கள், ஏழைகளுக்கிடையிலான இடைவெளி பளீரெனத் தெரியும் விதத்தில் விரிவடைவதற்கும் உழைக்கும் மக்களின் பெரும் பிரிவினர் இடம் பெயர்தலுக்கும் உடைமை பறிக்கப்படுவதற்கும் வறுமைமயமாதலுக்கும் ஆளாக்குகிறது. கார்ப்பரேட் சார்பு, ஏகாதிபத்தியச் சார்புக் கொள்கையைக் கொண்ட இந்த ஆட்சி, ஊடகத்துறையில் ஆதிக்கம் செலுத்தும் கார்ப்பரேட்களின் ஆதரவையும் மேல் நோக்கி நகரும் நடுத்தர வர்க்கத்தின் செல்வாக்குமிக்க பிரிவினரின் விமர்சனமற்ற ஆதரவையும் பெற்றுள்ளது. அதே நேரம் விரிவடைந்து வரும் மத்தியதர வர்க்கத்தின் ஒரு பரந்த பிரிவினர், பெருந்தொழில் குழும சூறையாடல் மற்றும் ஏகாதிபத்திய ஆதிக்கத்திற்கெதிரான வெகுமக்கள் போராட்டத்தை ஆதரிக்கின்றனர்; பல நேரங்களில் மக்களின் ஜனநாயக உரிமைகள் மற்றும் விருப்பங்களின் அறுதியிடலுக்கான போராட்டத்திற்கு ஒரு கூர்முனையை வழங்குகின்றனர்.

தொகுத்துச் சொன்னால், கட்சி, இந்தியாவை ஒரு மேலோங்கிய விவசாய பின்தங்கிய முதலாளித்துவ சமூகம் எனவும் இச்சமூகம், விடாப்பிடியான நிலப்பிரபுத்துவ மிச்சசொச்சங்களாலும் அப்பட்டமான காலனிய தொடர்ச்சிகளாலும் வாட்டி வதைக்கும் பேராசைமிக்க உலக மூலதனம், ஏகாதிபத்தியத்தின் ஆதிக்கத்தாலும் முடக்கப்படுவதுடன் அச்சக்திகளை மறுஉறுதி செய்கிறதென்றும் கண்டுணர்கிறது. ❑ தொடரும்...


மாலெ தீப்பொறி

சந்தாதாரர் ஆகிடுவீர்!!

நன்கொடை தாரீர்!!!

மாதம் இருமுறை    தனி இதழ் ரூ.10 : ஆண்டுச் சந்தா ரூ.200

## தமிழக தொழிற்சங்க இயக்கத்தின் புரட்சிகர மரபை உயர்த்திப் பிடிக்கும்

# ஏஐசிசிடியுவின் 10 வது மாநில மாநாடு!

2017 டிசம்பரில் ஏஐசிசிடியுவின் ஒன்பதாவது மாநில மாநாடு சென்னை பாடியநல்லூரில் நடைபெற்றது. அதற்குப் பிறகு சவாலான சூழலில் வண்டலூரில் கூடிய பொதுக்குழு புதிய நிர்வாகிகளை தேர்ந்தெடுத்தது. 2020 மேற்கு வங்கத்தில் நடைபெற்ற 10வது அகில இந்திய மாநாட்டில் தமிழகத்தின் உரிய பங்களிப்பை புதிய நிர்வாகக் குழு திறம்படச் செய்தது. இந்த இயக்கப் போக்கில் அமைப்பின் ஒற்றுமையையும் உறுதிப்பாட்டையும் நிலை நிறுத்திக் கொண்டது.

அகில இந்திய மாநாடு முடிந்து வந்தவுடன் நாடே கொரோனா பெருந்தொற்றில் முடங்கிப் போனது. அந்த சூழ்நிலையிலும் ஏஐசிசிடியு தமிழகத்தில் நிராதரவான தொழிலாளர்களுக்கும் புலம்பெயர்ந்த தொழிலாளர்களுக்கும் ஆதரவு கரம் நீட்டி, எல்லா வகையிலும் தொழிலாளர் துயர் துடைக்க முன்னணி பாத்திரம் ஆற்றியது. உணவு ஏற்பாடு முதல் புலம் பெயர்ந்தத் தொழிலாளர்கள் சொந்த ஊருக்கு செல்வது வரை உதவியது. அரசாங்க நிறுவனங்களையும் திறம்பட பயன்படுத்திக் கொண்டது. பெருந் தொற்று காலம் முடிந்து அமைப்பை உறுதிப் படுத்திக் கொண்டு போராட்ட இயக்கங்களை இன்றளவும் அயராது தொடர்ந்து கொண்டிருக் கிறது.

### தொழிலாளர், விவசாயிகள் விரோத, கார்ப்பரேட் ஆதரவு, காவிப் பாசிச மோடி ஆட்சி!

2014இல் வெற்றி பெற்ற மோடி மீண்டும் 2019 அசுர பலத்துடன் ஆட்சிக்கு வந்தார். 2014 இல் போதுமான ஆதரவு இல்லாமல் கிடப்பில் போட்ட மக்கள் விரோத, தொழிலாளர் விரோத, அம்பானி, அதானி, கார்ப்பரேட் ஆதரவு பாசிசத் திட்டங்களை நல்வாய்ப்பாக பயன்படுத்தி முழு வீச்சில் அமல்படுத்தத் துவங்கினார். தன்னுடைய காவிப் பாசிச நிகழ்ச்சி நிரலை பட்டவர்த்தனமாக வெளிப்படுத்தினார். 'இந்து ராஷ்ட்ரா' எனும் முழக்கம் நமது அரசியலமைப்புச் சட்டத்துக்கு பெரும் அச்சுறுத்தலாக மாறியிருக்கிறது. கார்ப்பரேட் நலனிலிருந்து, இந்து ராஷ்டிர கனவிலிருந்து வளர்ச்சி என்ற பெயரில் கொண்டு வரப்படும் திட்டங்கள் எல்லாமே விவசாயிகள், தொழிலாளர்கள் நலனிலிருந்து, மக்கள் நலனிலிருந்து கொண்டு வரப்படுவதாகவே ஆட்சியாளர்கள் தம்பட்டம் அடிக்கிறார்கள். விஸ்வகுருவின் ஆட்சியில் அமிர்தகாலம் நடைபெறுவதாக புளுகு மூட்டையை அவிழ்த்து விடுகிறார்கள். மூன்று வேளாண் சட்டங்களுக்கு எதிராக ஒரு வருடத்திற்கு மேலாக போராடி 700க்கும் மேற்பட்ட விவசாயிகள் உயிர்த்தியாகம் செய்து வீரஞ்செறிந்த போராட்டத்தின் மூலம் கார்ப்பரேட் ஆதரவு விவசாயிகள் விரோத சட்டங்களை மோடி அரசு திரும்பப் பெற வைத்தார்கள்.

### தொழிலாளர்களை அடிமைகளாக்கும் 4 தொழிலாளர் சட்டத் தொகுப்புகள்!

2014இல் ஆட்சிக்கு வந்த உடனேயே தொழிலாளர் சட்டங்கள் திருத்தப்படும் என மோடி அறிவித்தார். ஆனால், ராஜ்யசபாவில் பெரும்பான்மை இல்லாத காரணத்தால் அவரால் அதைச் செய்ய முடியவில்லை. 2019ல் இரண்டாம் முறையாக ஆட்சிக்கு வந்தவுடன் 2019 ஆகஸ்டிலேயே ஊதியம் பற்றிய சட்டத் தொகுப்பு நிறைவேற்றப்பட்டது. நாடே பெரும் தொற்றுப் பாதிப்பில் இருந்தபோது 2020 செப்டம்பரில் 1)தொழில் உறவு 2)சமூக பாதுகாப்பு 3)பணியிடப் பாதுகாப்பு, சுகாதாரம் மற்றும் தொழில் நிலைமைகள் ஆகிய மூன்று சட்டத் தொகுப்புகளும் நிறைவேற்றப்பட்டது. பின்னர், மத்திய விதிகளும் உருவாக்கப்பட்டு சட்டம் அமலாக்கத்திற்கு தயார் நிலையில் உள்ளது. மாநில விதிகளை உருவாக்கும்படி மாநிலங்களுக்கு ஒன்றிய அரசு அழுத்தம் கொடுத்து வருகிறது. ஏஐசிசிடியு உட்பட 10 மையச் சங்கங்கள் இணைந்து நாடு முழுவதும் கடும் எதிர்ப்புகளைக் கட்டமைத்து வருகின்றன. இந்த 2024 நாடாளுமன்றத் தேர்தலையும் கவனத்தில் கொண்டு சட்டத் தொகுப்புகளின் அமலாக்கத்தைத் தள்ளி வைத்திருக்கிறார்கள். எப்படி இருந்தபோதிலும் தொழிலாளர்களின் தலை மீது கொடு வாளாக சட்டத் தொகுப்புகள் தொங்கிக் கொண்டிருக்கிறது.

### தமிழ்நாட்டின் திமுக ஆட்சி.

மத்தியில் ஆளும் பாஜகவின் அடிமை அரசாக இருந்த பழனிச்சாமி அரசாங்கம்

அகற்றப்பட்டு திமுக ஆட்சி அமைத்தது. அனைத்துத் தரப்பு மக்களையும் குறிப்பாக தொழிலாளர்கள், அரசு ஊழியர்கள், ஆசிரியர்கள், செவிலியர்கள் மற்றும் விவசாயிகளின் கோரிக்கைகள் தீர்க்கப்படும் என தேர்தல் அறிக்கையிலேயே திமுக வாக்குறுதி அளித்திருந்தது. ஒன்றிய மோடி அரசின் தொழிலாளர்கள் விரோத நான்கு சட்டத் தொகுப்புகளை எதிர்த்து நடந்து வரும் இயக்கங்களில் தொழிலாளர் முன்னேற்ற சங்கமும் முக்கிய பங்காற்றியது. விவசாயச் சட்டங்களுக்கு எதிராக சட்டமன்றத்தில் திமுக அரசு தீர்மானம் நிறைவேற்றியது வரவேற்கத்தக்கது. ஸ்டெர்லைட் ஆலையை மீண்டும் திறக்க விடாமல் பார்த்துக் கொள்கிற அதே நேரம், துப்பாக்கிச் சூடு சம்பவம் பற்றிய அருணா ஜெகதீசன் ஆணைய அறிக்கை மீது நடவடிக்கை எடுக்காமல் இருக்கிறது.

டெல்லியில் இருந்து மேற்குவங்கம், கேரளா, தமிழ்நாடு வரை எல்லா எதிர்க்கட்சி அரசாங்கங்களுமே மூலதனத்தை ஈர்ப்பதில், அதற்கு சலுகை வழங்குவதில் போட்டி போட்டுக் கொண்டு நிற்கின்றனர். தொழிலாளர் விரோத சட்டத் தொகுப்புகளுக்கு எதிராக திமுக உட்பட எந்தவொரு எதிர்க்கட்சி ஆளும் மாநில அரசும் சட்டமன்றத்தில் தீர்மானம் நிறைவேற்ற வேண்டும் என்ற தொழிற்சங்கங்களின் கோரிக்கைக்கு செவிசாய்க்கவில்லை.

## அடையாள நடவடிக்கைகள் போதுமானதல்ல.

தமிழ்நாடு தொழிலாளர் துறை அமைச்சர் ஏஐடியுசி அலுவலகம் சென்று தொழிலாளர் கோரிக்கைகளை கேட்டுப் பெற்றதாகட்டும், வியாபார நிறுவனங்களில் சிப்பந்திகள் உட்கார இருக்கைகள் வழங்க வேண்டும் என்ற அரசாணை, அலுவலகங்களில் தூய்மைப் பணியாளர்கள் உட்கார்ந்து சாப்பிட இட வசதி செய்து கொடுக்க வேண்டும் என்ற உத்தரவு, மகளிர் உரிமைத் தொகைத் திட்டம், நலவாரிய பயன்களில் சிறிதளவு உயர்வு, ஒன்றிய அரசுக்கு எதிரான வேலை நிறுத்தப் போராட்டத்திற்கு ஆதரவு கேட்டுச் சென்ற தொழிற்சங்க பிரதிநிதிகளை முதலமைச்சர் சந்தித்தது, அரசு ஊழியர்களுக்கான அகவிலைப்படி உயர்வு வரை எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் போதுமானதல்ல பதவியேற்று இரண்டரை ஆண்டுகள் ஆகிவிட்ட நிலையில் தேர்தல் வாக்குறுதியில் 100% நிறைவேற்றப்பட்டுள்ளது என்ற அறிவிப்பை கரத்தாலும் கருத்தாலும் உழைக்கும் மக்கள் ஏற்றுக்கொள்ள தயாரில்லை. அதனால்தான் சென்னை அரசு ஊழியர்கள், ஆசிரியர்கள், செவிலியர்களின் போராட்டக் களமாகிக் கொண்டிருக்கிறது.

## காலிப் பணியிடங்கள் நிரப்புதல், பழைய பென்ஷன் திட்டம் வேண்டும்,

## பயிற்சியாளர் முறை, அவுட்சோர்சிங், குறித்த கால வேலை, காண்ட்ராக்ட்மயம் வேண்டாம்!

மாநில அரசுத் துறைகளில், மாநில அரசு பொதுத்துறை நிறுவனங்களில் உள்ள பல லட்சம் காலிப் பணியிடங்கள் நிரப்பப்பட வேண்டும். தனியார் வேலை வாய்ப்பு முகாம் மூலம் வேலைவாய்ப்பு என்பது வெறும் கண் துடைப்பே. கௌரவமான வேலை நிலைமைகள், பணி நிலைமைகள், சமூகப் பாதுகாப்பு, ஓய்வு காலப் பயன்களுடன் வேலை வேண்டும். பெற்று வரும் சம்பளத்தில் 50% ஓய்வூதியத்தை உத்தரவாதம் செய்யும் பழைய பென்ஷன் திட்டம் என்ற தேர்தல் வாக்குறுதி நிறைவேற்றப்பட வேண்டும். அதுபோல் பத்தாண்டு காலம் அரசுத் துறையில் பணிபுரிந்தவர்கள் நிரந்தரம் செய்யப்படுவார்கள் என்ற வாக்குறுதியும் நிறைவேற்றப்பட வேண்டும். காண்ட்ராக்ட்மயம் அவுட்சோர்சிங் என்று சொல்லி இருக்கின்ற வேலையையும் பறிக்கின்ற நடவடிக்கைகள் நிறுத்தப்பட வேண்டும். நிரந்தரத் தொழிலாளர் எண்ணிக்கையை அதிகரிக்க காண்ட்ராக்ட் மயத்தைக் கட்டுப்படுத்த, ஒரு தொழிற்சாலையில் நிரந்தர தொழிலாளர் எண்ணிக்கையில் குறிப்பிட்ட சதவீதம்தான் பயிற்சியாளர்/ காண்ட்ராக்ட் தொழிலாளர் இருக்க முடியும் என்பதை உறுதி செய்ய தமிழக சட்டமன்றம் நிறைவேற்றியுள்ள பயிற்சியாளர் சட்டத் திருத்தத்தை அமலாக்க வேண்டும். அதற்கு நிலையாணைச் சட்டத்தில் உரிய திருத்தம் செய்ய வேண்டும்.

## திரும்பப் பெறப்பட்ட 12 மணி நேர வேலை அரசாணை!

தமிழகத் தொழிலாளர் வர்க்கம் ஒற்றை மனிதனாக எழுந்து நின்றதால் 12 மணி நேர வேலை அரசாணை திரும்பப் பெறப்பட்டது. ஆளும் கட்சியின் தொழிலாளர் முன்னேற்ற சங்கம் இந்த விஷயத்தில் உறுதியாக நின்றது வரவேற்பைப் பெற்றது. தமிழகத் தொழிலாளர் அமைச்சரை அனைத்து சங்கப் பிரதிநிதிகள் சந்தித்தபோது ஏஐசிசிடியு மட்டுமே 12 மணி நேர அரசாணை திரும்ப பெறப் படாவிட்டால் சட்டமன்றம் முற்றுகை உட்பட போராட்டங்

களை சந்திக்க வேண்டி இருக்கும் என்று எழுத்துபூர்வ கடிதம் கொடுத்தது. ஒட்டுமொத்த தொழிற்சங்க இயக்கத்திற்கு அது உத்வேகம் அளித்தது. அரசாணை திரும்பப் பெறுவதற்கான தைரியம் முதலமைச்சர் ஸ்டாலினிடம் இருந்த தாக பெருமையும் பேசப்பட்டது. இந்த நிகழ் வானது ஒட்டுமொத்த இந்தியாவுக்கும் தொழி லாளர் சட்டத் தொகுப்புகளை அமல்படுத்தினால் என்ன நடக்கும் என்பதற்கும் எச்சரிக்கையாக இருந்தது.

**பாக்ஸ்கான் பெண் தொழிலாளர் போராட்டம்!**

ஆட்டோமொபைல் துறையின் முன்னணி நகரமாக விளங்கும் சென்னையில் லாபத்தை கொட்டிக்குவித்துக் கொடுக்கும் தொழிலாளர் களின் வாழ்நிலையை படம்பிடித்துக் காட்டியது பாக்ஸ்கான் பெண் தொழிலாளர்கள் இரவு பகலாக நடத்திய போராட்டம். போராட்டத்தை முடிவுக்கு கொண்டு வந்தபிறகு போராட்ட முன்னணிகளை நிர்வாகம் பலி வாங்கியது. ஆட்டோமொபைல் துறையில் போராட்டக் கனல் இருந்து கொண்டே இருக்கிறது.

**பாதுகாப்பற்ற சேவைத் துறை வேலைகள்!**

தகவல் தொழில்நுட்பம்(IT) தகவல் தொழில் நுட்பத்தால் இயங்கும் சேவைத் (ITES) துறையில் உள்ள பணிநிலைமைகள் பெரும் பாலும் பாதுகாப்பற்றதாய் உள்ளது. எவ்வித பணிப் பாதுகாப்பும் சமூகப் பாதுகாப்பும் இல்லாதச் சூழலில் உலகச் சந்தையில் ஏற்படும் ஏற்ற இறக்கங்களால் கொத்துக் கொத்தாகத் தொழிலாளர்கள் வெளியேற்றப்படும் அபாயம் இருந்து கொண்டே இருக்கிறது. வீட்டிலிருந்தே வேலை செய்யும் தொழில்நுட்ப வசதி இருந்த காரணத்தால் கொரோனா காலப் பாதிப்பிலிருந்து இப்பிரிவுத் தொழிலாளர்கள் தப்பிப் பிழைத்தனர்.

**தொழிலாளர் விரோத நடவடிக்கைகளை திமுக அரசு கைவிட வேண்டும்!**

மாநிலத்தில் மிகப்பெரிய வேலை அளிப்ப வராக இருக்கும் மின்சாரத் துறை, போக்கு வரத்துத் துறை தொழிலாளர்களின் நியாயமான கோரிக்கைகள் மீது திமுக அரசுக்கு நேர்மறை அணுகுமுறை தேவை. மின்வாரியத்தில் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள 5000 கேங்க் மேன் தொழிலாளர்களுக்கு உடனடியாக பணி வழங்க வேண்டும். வேலை கேட்டு போராடிய கேங்மேன் தொழிற்சங்க முன்னணிகள் மீதான குற்றவியல் நடவடிக்கை கைவிடப்பட வேண்டும். இ டெண்டர் முறையை ரத்து செய்து ஏற்கனவே பணியில் உள்ள ஒப்பந்த ஊழியர் களை இனம் கண்டு அவர்களை நிரந்தரப்படுத்த வேண்டும்.

போக்குவரத்துத் துறையில் எந்த விதத்திலும் 12 மணி நேர வேலையை அனுமதிக்க கூடாது காண்ட்ராக்ட் விடுவதற்கான டெண்டரை ரத்து செய்து நேரடி நியமனம் மூலம் பணியாளர்கள் நிரப்பப்பட வேண்டும்.

உள்ளாட்சித் துறையில் குறைந்தபட்ச ஊதியம் அல்லது மாவட்ட ஆட்சியர் அறிவித்த ஊதியம் சமூகப் பாதுகாப்பு திட்டத்துடன் முறையாக அமலாக்கப்பட வேண்டும். 'சம வேலைக்கு சம ஊதியம்' என்ற அடிப்படையில் ஆணுக்கும் பெண்ணுக்கும் அதுபோல் நிரந்தரத் தொழிலாளிக்கும் காண்ட்ராக்ட் தொழிலாளிக்கும் சம ஊதியம் வழங்கப்பட வேண்டும். மலக்குழி மரணங்களுக்கு முற்றுப்புள்ளி வைக்க வேண்டும் தூய்மைப் பணியாளர்கள் மீதான சாதிய ரீதியான அணுகுமுறையை அனுமதிக்கவே கூடாது.

பெரும்பான்மைத் தொழிலாளர்களின் ஆதரவு பெற்ற தொழிற்சங்கத்தை நிர்வாகம் அங்கீகரிக்க வகை செய்யும் தொழிற்சங்க அங்கீகார சட்டம் இயற்றப்பட வேண்டும்.

நுகர்பொருள் வாணிபக் கழகத்தில் கொள் முதல், சேமிப்பு, விநியோகம் ஆகிய நடவடிக் கைகளை தனியார்மயமாக்கக்கூடாது. அங்கு பணி செய்யும் சுமைப் பணித் தொழிலாளர் களுக்கு உடனடியாக ஊதிய உயர்வு அளிக்கப்பட வேண்டும்.

கௌரவமான வாழ்க்கை வாழ்வதற்காக உழைப்பவர் எவராலும் குறைந்தபட்ச ஊதியம் ரூபாய் 26,000, குறைந்தபட்ச ஓய்வூதியம் ரூபாய் 13,000 உத்தரவாதம் செய்திட வேண்டும். குறைந்தபட்சம் 20 சதவீத வருடாந்தர போனஸ் வழங்க வேண்டும். கட்டுமான தொழிலாளர் நல வாரியத்தில் நடைமுறையில் உள்ள செஸ் வரியை ஒரு சதவீதத்தில் இருந்து மூன்று சதவீதமாக உயர்த்தி நலவாரிய பயன்களை அதிகரித்திட வேண்டும். மாநில உரிமைகளுக்கானப் போராட்டம் அவசியமானது. அதேவேளை, உழைக்கும் மக்கள் மீதான கண்மூடித்தனமான தாக்குதலை முறியடிப்பதும் அவசியமானதாகும்.

**காவல்துறை அராஜகமும் ஜனநாயக வெளி சுருங்கி வருவதும்**

தொழிலாளர் போராட்டங்களில் காவல்

துறையின் தலையீடு கூடாது என்ற நீதிமன்றத் தீர்ப்புகள் இருந்தபோதிலும் காவல்துறையின் அராஜகம் தொடர்ந்து வருகிறது. பொதுவாக தொழிலாளர் போராட்டங்களுக்கு அனுமதி இல்லை என்பது எழுதப்படாத விதியாக உள்ளது. போராட்டம் நடக்கும் போது தொழிற்சங்க தலைவர்களை கைது செய்வதும் குண்டுக் கட்டாக தூக்கி சிறையில் அடைப்பதும் நடந்து வருகிறது.

பிரச்சனைகளை மக்கள் மன்றத்தில் கொண்டு செல்வதற்குதான் போராட்டங்கள் நடத்தப்படு கின்றன. ஆனால், போராட்டம் நடத்த மக்கள் நடமாட்டமே இல்லாத இடங்களில்தான் அனுமதி என்ற நிலை திமுக ஆட்சியிலும் தொடர்கிறது. காவல்துறைக்கு சுதந்திரம் அளிக்கப்படுகிறது என்ற பெயரில் ஜனநாயகப் போராட்டங்கள் ஒடுக்கப்படக்கூடாது.

### சமூக நீதியை நிலை நிறுத்த பொருளாதார நீதியும் தேவை.

தமிழக அரசு காலிப் பணியிடங்களை நிரப்ப வேண்டும். தேர்தல் வாக்குறுதி அளித்த படி 10 ஆண்டுக்கு மேலாக நிரந்தரமற்ற வேலைகளில் பணி புரிந்து கொண்டிருப்ப வர்களை நிரந்தரம் செய்ய வேண்டும். டாஸ்மாக் ஊழியர்களைப் பணி வரன்முறை செய்ய வேண்டும். தனியார்மயத்துக்கு முற்றுப்புள்ளி வைக்க வேண்டும். அப்போதுதான் பிற்படுத்தப் பட்ட, தாழ்த்தப்பட்ட மக்கள் கவுரவமான ஊதியமும், கண்ணியமான பணி நிலைமையும் பெறுவர். தமிழ்நாட்டிலுள்ள மத்திய அரசு நிறுவனங்கள், மத்திய பொதுத்துறை நிறுவனங் களில் 90% பணியிடங்கள் தமிழ்நாடு மக்களுக்கே வழங்க வேண்டும். அப்போது மட்டுமே சமூக நீதி சாத்தியம்.

### குடியிருப்பை அடிப்படை உரிமையாக்குக!

கிராமப்புற வறியவர்களுக்கு வீட்டுமனையும் வீடு கட்ட மானியமும் வழங்க வேண்டும். நகர்ப்புற வறியவர்களுக்கு அடுக்கு மாடி குடியிருப்பு கட்டிக் கொடுக்க வேண்டும். பீடித் தொழிலாளர்களுக்கு பீடி - சிகார் சட்டத்தின் படி வீடு கட்ட மானியம் வழங்க வேண்டும். கட்டுமானத் தொழிலாளர்களுக்கு அடுக்குமாடி குடியிருப்பில் முன்னுரிமை அளிக்க வேண்டும். நகரை அழகுபடுத்துதல் என்ற பெயரிலோ அல்லது பொலிவுறு நகர் பெயரிலோ அல்லது ஆக்கிரமிப்பு அகற்றம் என்றோ வசதியான மாற்று ஏற்பாடு இல்லாமல் நகரத்தை கட்டியெழுப்பும் உழைக்கும் மக்களை அவர்கள் குடியிருப்பு களிலிருந்து அப்புறப்படுத்தக்கூடாது. தமிழக உழைக்கும் மக்கள் எவ்வளவு மோசமான பணி சூழலுக்கு வறுமையின் காரணமாக தள்ளப் பட்டிருக்கிறார்கள் என்பதற்கு தொடர்ந்து நடக்கும் பட்டாசு ஆலை விபத்துக்கள் ரத்தச் சாட்சியாக இருக்கின்றன.

ஏஐசிசிடியு பத்தாவது மாநில மாநாடு தமிழக உழைக்கும் மக்களின் அபிலாசைகளை பிரதிபலிக்கும், அதற்குத் தீர்வு காணும் மாநாடாக அமையும்.

பாசிச மோடி ஆட்சியை தோற்கடிப்போம்!

கார்ப்பரேட் தாக்குதலை முறியடிப்போம்!

வெறுப்பு அரசியலை வேரறுப்போம்!

தொழிலாளர் உரிமை இயக்கத்தை வலுப்படுத்துவோம்!

போர்க்குணமிக்க தொழிற்சங்க இயக்கத்தை கட்டி எழுப்புவோம்!

## அகில இந்திய தொழிற்சங்க மையக் கவுன்சில் (ஏஐசிசிடியு)

# தமிழ்நாடு 10 வது மாநில மாநாடு

2023 டிசம்பர் 16 - 17

**தோழர்.என்.கே.நடராஜன் நினைவரங்கம்**

தோழர்.சுகுந்தன் நினைவு மேடை

**டி.பி.மஹால், பசுபதிபாளையம், கரூர்.**

# அகில இந்திய முற்போக்கு பெண்கள் கழகத்தின் 9வது தேசிய மாநாட்டில் நிறைவேற்றப்பட்ட அறிக்கையிலிருந்து சில பகுதிகள்...

## 33% இட ஒதுக்கீட்டின் உண்மை நோக்கம்!?

....சில நாட்களுக்கு முன்பு, பெண்களுக்கான இடஒதுக்கீடு மசோதா செப்டம்பர் 20 அன்று நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டது. கடந்த 27 ஆண்டுகளாக இந்த மசோதா காத்திருந்தது. 18 செப்டம்பர் 2023 அன்று புதிய நாடாளுமன்ற கட்டிடத்தில், ஒரு சிறப்பு அமர்வின் போது பாஜக அரசாங்கம் இந்த மசோதாவை தாக்கல் செய்தது. சில சிறப்பு பணிகளை நிறைவேற்ற கடவுள் தன்னைத் தேர்ந்தெடுத்ததாக அப்போது மோடி கூறினார்! அவர் இந்த மசோதாவை 'பெண்கள் சக்தி வழிபாடு' சட்டம் என்று அழைத்தார். ஆனால், மசோதா வெளிவந்த பிறகுதான், இந்த தெய்வீகப் பிரதிநிதியும் அவரது குழுவினரும் பெண்கள் மீது ஒரு பெரிய தந்திரத்தை திட்டமிட்டு ஏவியுள்ளனர் என்பது தெளிவாகியுள்ளது.

....ஆனால் உண்மையில் பெண்கள் இட ஒதுக்கீடு சட்டத்தை நடைமுறைப்படுத்துவது நிச்சயமற்றதாகவே உள்ளது. மக்கள் தொகைக் கணக்கெடுப்பு மற்றும் தொகுதிகள் மறு வரையறை செய்யப்பட்ட பிறகே இது நடைமுறைக்கு வரும் என்று இந்த மசோதா கூறுகிறது. இருப்பினும், இந்த அரசாங்கம் 2021 மக்கள் தொகை கணக்கெடுப்பை ஒத்திவைத்துள்ளதால், அடுத்த மக்கள் தொகை கணக்கெடுப்பு எப்போது நடத்தப்படும் என்பது தெரியாது. தொகுதி மறுவரையறை என்பது மக்கள்தொகை கணக்கெடுப்புக்குப் பிறகு செய்ய வேண்டிய ஒரு சிக்கலான பணியாகும். எனவே, இந்தச் சட்டம் பல ஆண்டுகளுக்கு நிலுவையில் இருக்கும், எனவே, இது செத்துப்போன ஒன்றாகும்.

இடஒதுக்கீட்டிற்குள் உள் ஒதுக்கீடு வேண்டுமென்ற நியாயமான கோரிக்கை நீண்ட காலமாக பொது விவாதத்தில் உள்ளது. இது தொடர்பான கருத்து வேறுபாடுகள் மகளிர் இடஒதுக்கீடு மசோதாவை சிறிது காலம் காத்திருக்க வைத்திருந்தது. மசோதா சட்டமாக்கப்பட்டபோது இந்த இடஒதுக்கீடு சேர்க்கப்பட்டிருக்க வேண்டும். பல ஆண்டுகளுக்கு முன்பே, அகில இந்திய முற்போக்கு பெண்கள் கழகம், பெண்கள் இடஒதுக்கீடு கோரிக்கையில் உள்ஒதுக்கீட்டைக் கொண்டுவர வேண்டுமெனக் கோரியது. பிற்படுத்தப்பட்ட சாதிகள், சிறுபான்-மையினர், பட்டியலின மற்றும் பழங்குடியினச் சமூகங்களைச் சேர்ந்த பெண்களுக்கு விகிதாச் சாரப்படி 33 சதவீத இடஒதுகீட்டிற்குள் இடமளிக்கப்பட வேண்டும் என்ற அந்த கோரிக்கையை இப்போது மீண்டும் வலியுறுத்துகிறோம். இந்தச் சட்டம் 2024 தேர்தலின்போதே அமல்படுத்தப்பட வேண்டு மென்றும் பெண்கள் இடஒதுக்கீட்டை ராஜ்யசபா, சட்டப்பேரவை மேலவைகளிலும் ஒரே நேரத்தில் அமல்படுத்த வேண்டும் என்றும் கோருகிறோம்.

இந்த மசோதாவைத் தாக்கல் செய்வதில் அரசு இவ்வளவு ரகசியமாகவும், அவசரமாகவும் செயல்பட்டதை வைத்துப் பார்க்கும் போது, உலகம் முழுவதும் அரசின் கெட்ட பெயர், வளர்ந்து வரும் எதிர்க்கட்சிகளின் ஒற்றுமை, நாடு முழுவதும் பெண்களிடையே அதிகரித்து வரும் அரசுக்கு எதிரான கோபம் இவற்றை சரிக்கட்டும் முயற்சியாகவே இந்த சட்டம் கொண்டு வரப்பட்டதாகவே தெரிகிறது.

## பாஜக-ஆர்எஸ்எஸ் ஆட்சி, பெண்களுக்கெதிரான வன்முறை ஆட்சி

..... 9 ஆண்டுகால ஆட்சியில், பாஜக-ஆர்எஸ்எஸ் அரசு, பெண்களுக்கு எதிரான வன்முறைகள் மற்றும் துன்புறுத்தல்களைத் தொடர்ந்து புறக்கணித்து வருகிறது, பெரும்பாலும் பெண்களையே குற்றம் சாட்டி வருகிறது. ஒரு இயக்கத்தால் அழுத்தம் கொடுக்கப்பட்டால், அரசாங்கம் தோள்களைக் குலுக்கிக்கொண்டு, இதெல்லாம் ஓரஞ்சார சக்திகளின் கைவேலை என்று கூறி எழுச்சியை அடக்கிவாசிக்க முயல்கிறது. ஆனால் இந்த ஆண்டு நடந்த சில கவலைதரும், வெட்கக்கேடான சம்பவங்கள், அரசாங்கம் வெளிப்படையாக குற்றவாளிகளுக்கு ஆதரவாக இருப்பதைக் காட்டுகிறது.

பாஜக எம்பியும், அப்போதைய மல்யுத்த சங்கத்தின் தலைவருமான பிரிஜ் பூஷன் சரண் சிங் மீது, மல்யுத்த வீராங்கனைகளால் பாலியல் துன்புறுத்தல், சுரண்டல் குற்றச்சாட்டுகள் எழுந்தன. மல்யுத்த வீரர்களில் ஒலிம்பிக் மற்றும்

உலக சாம்பியன்ஷிப் போட்டிகளில் பதக்கம் வென்ற பெண்களும் அடங்குவர். அவர்களது வெற்றியை பாஜகவினரும் கொண்டாடினர். ஆனால், இந்த வீராங்கனைகள் ஜனவரி 18, 2023 அன்று தைரியமாக முன்வந்த போது, தாங்கள் எதிர்கொள்ளும் பாலியல் துன்புறுத்தல்களுக்கு நீதி கோரியபோது, பெண்களுக்கான நீதியையும் தள்ளிப்போட முயற்சி மேற்கொள்ளப்பட்டது. பிஜேபி அவர்க ளின் கோரிக்கைகளை பல்வேறு தந்திரங்களின் மூலம் திசைதிருப்பியது, மேலும் மல்யுத்த வீராங்கனைகளின் குற்றச்சாட்டுகளை இழிவு படுத்துவதற்காக அனைத்து வகையான எதிர்க் குற்றச்சாட்டுகளும் சுமத்தப்பட்டன. இறுதியில், முதல் தகவல் அறிக்கை பதிவு செய்து விசாரணைக் குழுவின் அறிக்கையை பகிரங்கப் படுத்த வேண்டும் என்ற கோரிக்கையுடன் உச்ச நீதிமன்றத்தை அணுக ஏப்ரல் முதல் வீரர்கள் ஜந்தர் மந்தரில் தர்ணா தொடங்க வேண்டிய கட்டாயம் ஏற்பட்டது. வீராங்கனைகளின் குற்றச்சாட்டுகளை தீவிரமானதாகக் கண்டறிந்த உச்ச நீதிமன்றம், முதல் தகவல் அறிக்கை பதிவு செய்ய காவல்துறைக்கு உத்தரவிட்டது. போலீசார் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தனர். ஆனால் பிரிஜ் பூஷன் சரண் சிங் மீது எந்த அழுத்தமும் கொடுக்கப்படவில்லை.

குற்றம் சாட்டப்பட்டவர்கள் சுதந்திரமாக சுற்றித் திரிந்தனர், மல்யுத்த வீராங்கனைகளுக்கு எதிராக வாக்குமூலம் அளித்தனர். ஒரு மைனர் (வயது அடிப்படையில்) வீரரின் குடும்பத்தின் மீது அழுத்தம் கொடுப்பதன் மூலம், அவரும் அவரது கூட்டாளிகளும் முதல் தகவல் அறிக்கையைத் திரும்பப் பெறுமாறு கட்டாயப் படுத்தப்பட்டனர். மேலும், குற்றஞ்சாட்டப் பட்டவர் மீதான POCSO குற்றச்சாட்டுகளை நீக்க முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. பிரதமரின் மவுனத்திற்கு மத்தியில் வீரர்கள் மீது கடும் அடக்குமுறைகள் ஏவப்பட்டன. அதே நேரத்தில், இந்த வீரர்களுக்கு ஆதரவாக பெண்கள் அமைப்புகள் மட்டுமின்றி விவசாயிகள் அமைப்புகளும் பொதுமக்களும் வீதிகளில் இறங்கத் தொடங்கினர். இதற்கு வலு சேர்க்கும் வகையில், இந்தியா மற்றும் வெளிநாடுகளைச் சேர்ந்த மற்ற வீரர்கள் மல்யுத்த வீராங்கனைகளுக்கு ஆதரவாக நின்றபோது, குற்றம் சாட்டப்பட்டவர்கள் மீது குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டு, தலைவர் பதவியில் இருந்து பிரிஜ் பூஷன் நீக்கப்பட்டார். ஆனால் இன்றும் கூட அவர் பாஜகவின் எம்.பி., என்ற கோதாவில் கணிசமான அதிகாரத்தை செலுத்தி வருகிறார்.

## பெண்கள் உடல்கள் மீது போர்...

மணிப்பூரில் இரண்டு பெண்கள் நிர்வாண மாக்கப்பட்டு பாலியல் பலாத்காரம் செய்யப் பட்ட வீடியோ, சம்பவம் நடந்து ஒரு மாதத் திற்குப் பிறகு வைரலானபோது, மணிப்பூரில் நடந்து வரும் கொடூரமான வன்முறை பற்றி நாடு முழுவதும் அறியப்பட்டது. இது குறித்து பிரதமர் விளக்கம் அளிக்க வேண்டும் என்று நாடு முழுவதும் கோரிக்கை விடுத்தும் பிரதமர் மவுனம் சாதித்தார். மணிப்பூர் மீது எதிர்க் கட்சிகள் கொண்டு வந்த நம்பிக்கையில்லா தீர்மானத்தை அடுத்து, மணிப்பூரில் நடந்த சம்பவத்தை குறித்தும், எதிர்க்கட்சிகள் குறித்தும் மோடி பேசினார். மணிப்பூரில் நடந்த வன்முறையைக் கண்டிக்க வேண்டிய நேரத்தில் எதிர்க்கட்சிகளைத் தாக்கினார். மணிப்பூரில் கடந்த 5 மாதங்களுக்கு மேலாக இந்த வன்முறை நடந்து வருகிறது. ஆயிரக்கணக்கான மக்கள் வீடுகளை இழந்துள்ளனர். வன்புணர்ச்சி, கொலை மற்றும் தீ வைப்பு தொடர்கிறது, ஆனால் பிரதமர் மணிப்பூருக்கு இதுவரை செல்லவில்லை.

இந்த விவகாரத்தை மாநில பிரச்னை என்று கூறி மத்திய அரசு கைகழுவி விட முடியாது. பிரிவு 355ன் கீழ், அங்குள்ள பெரும்பாலான நிர்வாகம் மத்திய அரசின் கைகளில் உள்ளது. மணிப்பூரில் பாஜக அரசு உள்ளது, ஆனால் தற்போது நடக்கும் குழப்பங்களுக்கு முதல்வர் பதிலளிக்கவில்லை. மணிப்பூரில் மெய்தே சமூகத்தினர் பெரும்பான்மையாக உள்ளனர். முதல்வர் மற்றும் 60 எம்எல்ஏக்களில் 40 பேர் மெய்தே சமூகத்தைச் சேர்ந்தவர்கள். பாஜக–ஆர்எஸ்எஸ் மெய்தே மற்றும் குகி சமூகங்கள் தங்களுக்குள் சண்டையிடுவதை உறுதி செய் துள்ளது. இவை அனைத்தும் பாஜகவால் நன்கு திட்டமிடப்பட்டவை. இரு சமூகத்தினருக்கும் ஆயுதங்கள் விநியோகிக்கப்படுவதுடன், இந்து–கிறிஸ்தவ பிரிவினையையும் உருவாக்கும் முயற்சி மேற்கொள்ளப்பட்டுள்ளது. மொத்தத்தில், இயற்கை வளங்களை பெரு முதலாளிகள் கைப்பற்றுவதற்கு வசதியாக, இரு சமூகத்தினரின் உணர்வுகளையும் தூண்டிவிட்டு, பெண்களின் உடல் மீது போர் தொடுக்கப்படுகிறது. ❑

# திண்ணைச் சில்லுகள்...

## பரம ஏழை பட்டியல் வெளியிடத் தயாரா?

உருண் இந்தியா பணக்காரர்கள் பட்டியல் 2023ன் படி, நாட்டின் மிகப்பெரும் பணக்காரர்கள் வாழும் முதல் 20 நகரங்களில் சென்னை 5வது இடத்தை வகிக்கிறது. மும்பை(1), டெல்லி(2), பெங்களூர்(3), ஹைதராபாத்(4) ஆகிய மாநகரங்களுக்குப் பிறகு, 5வதாக சென்னை இருக்கிறது. 67 மிகப்பெரும் பணக்காரர்கள் சென்னையை வாழிடமாகக் கொண்டுள்ளார்கள். கடந்த ஆண்டை விட 16 பணக்காரர்கள் அதிகமாகி இருக்கிறார்கள். 16 பெரும் பணக்காரர்களைக் கொண்ட கோயம்புத்தூர் 12வது இடத்திலும் 7 பெரும் பணக்காரர்களைக் கொண்ட திருப்பூர் 19வது இடத்திலும் இருக்கின்றன. அதேபோல் மாநிலங்களை எடுத்துக் கொண்டால் மகாராஷ்ட்ரா, டெல்லி, குஜராத், கர்நாடகாவுக்கு அடுத்ததாக, மொத்தம் 103 பெரும் பணக்காரர்களைக் கொண்ட தமிழ்நாடு 5வது இடத்திலிருக்கிறது.
36,000 கோடி சொத்து உடைய, இந்தியாவின் முதல் 100 பெரும் பணக்காரர்களில் 40வது இடத்தில் இருக்கும் ராதா வேம்பு, ஒரு மென்பொருள் பொறியாளர், சென்னையின் முதல் பெரும் பணக்காரராக இருக்கிறார். இவர் ஜோஹோ கார்ப்பரேசன் என்கிற ஒரு மென்பொருள் கார்ப்பரேட் நிறுவனத்தின் பெரும்பான்மை பங்குகளுக்குச் சொந்தக்காரர். சென்னையின் பெரும் பணக்காரர் பட்டியலில் முன்னணியில் இருந்த சன் குழுமத்தின் கலாநிதி மாறன், அப்பல்லோ மருத்துவமனையின் பிரதாப் ரெட்டி ஆகியோரை பின்னுக்குத் தள்ளி முதல் இடத்துக்கு வந்திருக்கிறார்.
*(செய்தி: டைம்ஸ் ஆப் இந்தியா சென்னைப் பதிப்பு 23.10.2023)*
பெரும் பணக்காரர்களை அவர்களின் தனிநபர் சொத்து அடிப்படையில் தரவரிசைப்படுத்தும் அரசும் அரசுசார் மற்றும் தனியார் புள்ளியியல் நிறுவனங்களும், வறுமையை, தனிநபர் வருமானத்தின் அடிப்படையில் ஏன் தரவரிசைப்படுத்த மறுக்கிறார்கள்? ஏன் சராசரி வருமானம், பல பரிமாண வறுமைத் தரவரிசை என்கிற பெயரில், வறுமை அளவீட்டு முறைகளை சீர்குலைத்து, வறுமை ஒழிந்து விட்டது அல்லது குறைந்து விட்டது போன்ற ஒரு மாயத் தோற்றத்தை உருவாக்குகிறார்கள்? தனிநபர் வருமானத்தின் அடிப்படையில் தமிழகத்தின் பரம ஏழைகள் யார் என்ற பட்டியலை ஏன் வெளியிடக் கூடாது? அப்படிச் செய்தால், அடுத்தடுத்த ஆண்டுகளில் அவர்கள் வறுமைக் கோட்டை உண்மையில் கடந்தார்களா என்பதைத் தெரிந்து கொள்ளலாமே? வறுமை அளவீட்டு முறைகளில் பாஜக அரசையே, நிதி (என்ஐடிஐ) கமிஷனையே, திமுக ஆளும் தமிழ்நாடும் பின்பற்றுவது ஏனோ?

## எடப்பாடியின் திடீர்ப் பாசம்!

எடப்பாடியின் அஇஅதிமுக, பாஜக கூட்டணியிலிருந்து வெளியேறி விட்டது என்பதை பலரால் நம்ப முடியவில்லை. அது அண்ணாமலை உபயம் என்கின்றனர் சிலர். ஆனால், பாஜக அகில இந்திய தலைவர் நட்டாவையும் அமித்ஷாவையும் சந்தித்து ஆசி பெற்று, வெளியேறியது என்கின்றனர் வேறு சிலர். எது எப்படியோ, இப்போ முஸ்லீம் மக்களின் ஒரே நண்பன் அதிமுகதான் என்று எடப்பாடி திருவாய் மலர்ந்தருளியிருக்கிறார். இஸ்லாமிய சிறைவாசிகள் 20–25 ஆண்டுகளாக சிறையில் வாடிக்கொண்டு இருக்கிறார்கள் என்று வருத்தப்பட்டிருக்கிறார். இஸ்லாமியர்கள் மீது இப்படியொரு திடீர்ப் பாசம் எப்படி வந்தது எடப்பாடிக்கு? அந்த 25 ஆண்டுகளில் அதிமுகவும் ஆட்சியில் இருந்தது என்பது அய்யாவுக்கு மறந்து விட்டது போலும்! அப்போ, இஸ்லாமிய மக்களுக்கு எதிரான பாஜகவின் குடியுரிமைச் சட்டத்தை ஆதரித்தது எடப்பாடியின் அஇஅதிமுக இல்லையோ?
முஸ்லீம் மக்கள் மீதான எடப்பாடியின் இந்த முதலைக் கண்ணீருக்கு என்ன காரணமோ?
முஸ்லீம் மக்களின் ஒரு பிரிவு வாக்குகளை அதிமுக வாங்கி, திமுக/இந்தியா கூட்டணியைப் பலவீனப்படுத்தும் தந்திரமோ?

## பாரத் என்பது வெறும் பெயர் மாற்றம் அல்ல, ஆர்எஸ்எஸ்சின் இந்து ராஷ்டிரக் கனவின் ஒரு பகுதி

நாட்டின் அனைத்து எதிர்க் கட்சிகளும் சேர்ந்து "இந்தியா" என்ற பெயரில் ஒரு கூட்டணியைத் துவங்கிய போதே பலரும் பாஜகவின் எதிர்வினை எப்படி இருக்கும் என யோசனை செய்ய ஆரம்பித்து விட்டனர். ஆனால், நாட்டின் பெயரையே மாற்றும் அளவுக்கு செல்வார்கள் என எதிர்பார்க்கவில்லை. புதிய நாடாளுமன்றக் கட்டடத்தில் நடந்த முதல் சிறப்பு கூட்டத்திலேயே பெயர் மாற்றப்படலாம் என ஆரூடம் கணித்தனர். ஆனால், அந்தக் கூட்டம் பெண்களுக்கு 33 சதவீத இட ஒதுக்கீட்டுச் சட்டம் இயற்றியதோடு நின்று விட்டது. ஆனால், பெயர் மாற்றத்திற்கான சூழ்ச்சி இப்போது என்சிஇஆர்டி (கல்வி ஆராய்ச்சி மற்றும் பயிற்சிக்கான தேசிய நிறுவனம்) எனும் நாட்டின் பாடத் திட்டங்களைத் தீர்மானிக்கும் அமைப்பின் மூலம் அரங்கேற்றப்படுகிறது. இந்தியாவை 'பாரத்' என்று பாடப்புத்தகங்களில் குறிப்பிட வேண்டும் என அந்த நிறுவனம் ஒரு பரிந்துரையை அரசுக்கு வழங்கி உள்ளது. விரைவில் பாடப்புத்தகங்களில் 'இந்தியா' என்பது 'பாரத்' என மாற்றப்படும். ஏற்கனவே, ஜி 20 மாநாட்டு அழைப்பிதழில் இந்திய குடியரசுத்தலைவர் என்பது பாரத குடியரசுத்தலைவர் என மாற்றப்பட்டது. நாடாளுமன்றத்தில் விவாதம் ஏதும் இல்லாமலே ஒரு நாட்டின் பெயரே மாற்றப்படும் அளவுக்கு சர்வாதிகாரம் தலைவிரித்தாடுவது நம் நாட்டில்தான்.

அதே போல, 'பண்டைய வரலாறு' என்பதை 'பாரம்பரிய வரலாறு' என மாற்ற வேண்டும் எனவும் பரிந்துரை செய்யப்பட்டுள்ளது. இனிமேல், வரலாறு என்பது கடந்த காலங்களில் நடந்த உண்மை நிகழ்வுகளின் தொகுப்பாக இல்லாமல் புராணங்கள், இதிகாசங்களில் புனையப்பட்ட கதைகள், காவியங்கள், கற்பனைகள்தான் பாரம்பரியம் எனும் பெயரில் நமது வரலாற்றுப் பாடமாக மாறிவிடும் ஆபத்து இருக்கிறது.

'இந்தியா' என்பதற்குப் பதில், 'பாரத்' என அழைப்பது வெறும் பெயர் மாற்றம் மட்டுமல்ல, அது வரலாற்றைத் திரிப்பது, அறிவியலுக்குப் புறம்பான கருத்துக்களை பாடப்புத்தகங்களில் திணிப்பது, காந்தியைக் கொன்ற கோட்சேவை மகான் ஆக்குவது, முதல் சுதந்திரப் போர் பிரிட்டிஷ்க்கு எதிரானது அல்ல, முகலாயருக்கு எதிரானது என்பது போன்ற பல திரிபுகளை உண்மையாக்கிட துடிக்கும், ஆர்எஸ்எஸ்சின் இந்து ராஷ்ட்ரக் கனவின் ஒரு பகுதி ஆகும்.

## கம்யூனிஸ்டுகள் மானுடத்தை நேசிப்பவர்கள்

அறம் என்கிற ஒரு தமிழ் இணையதள ஏடு, "கம்யூனிஸ்டுகள் நாட்டுக்கு நாடு வேறுபடுகிறார்களா?"எனும் தலைப்பில் ஒரு கட்டுரை வெளி யிட்டுள்ளது. அதில் தற்போது நடந்து வரும் பாலஸ்தீனத்தின் மீதான இஸ்ரேலின் இனப்படுகொலை யுத்தம் பற்றிய பாலஸ்தீன கம்யூனிஸ்ட் கட்சி மற்றும் இஸ்ரேலிய கம்யூனிஸ்ட் கட்சியின் அறிக்கைகளை வெளியிட்டு இருக்கிறார்கள். இரண்டும் பாலஸ்தீனத்தின் மீதான இஸ்ரேல் நாட்டின் பாசிசப் போரை வன்மையாகக் கண்டிக்கின்றன. யூதப் பின்னணி இருந்தாலும் முஸ்லீம் பின்னணி இருந்தாலும் கம்யூனிஸ்டுகள் மானுடத்தை நேசிப்பவர்கள், பாசிசத்தை எதிர்ப்பவர்கள், ஒடுக்குமுறைகளுக்கு அஞ்சாதவர்கள் என்பதை அந்த அறிக்கைகள் சுட்டிக்காட்டுகின்றன. (https://aramonline.in/15438/communist-party-what-stand/)

## அண்ணாமலையும் 10,000 கொடிக் கம்பங்களும்

தமிழக பாஜக தலைவர் அண்ணாமலை வீட்டின் முன்பிருந்த கொடிக் கம்பம் அகற்றப்பட்டப்பின் அவர் கர்ஜித்தார்... 'நவம்பர் 1 முதல் தினசரி 100 கொடிகள் வீதம் 10,000 பிஜேபி கொடிகள் ஏற்றப்படும்' என்று. தமிழகத்தில் பாஜகவுக்கு அவ்வளவு பேர் இருக்கிறார்களா?!

அடுத்து சொன்னார்... 'பாஜக ஒரு இணையதளம் துவங்கவிருக்கிறது. அதில் வெளி மாநிலத்தவர்கள் ஒவ்வொரு கொடிக்கம்பத்தையும் உள்ளூர் பாஜக தலைவருக்கு பணம் கொடுத்து தத்து எடுத்துக் கொள்ளலாம்' என்று.

அண்ணாமலை அவர்களே! அது இணையதளக் கொடிக் கம்பமா அல்லது வெளி மாநில கொடிக் கம்பமான்னு சொல்லியிருக்கலாம்!

# தொடரும் தூய்மைப் பணித் தொழிலாளர் போராட்டங்கள்

## செங்கோட்டை நகராட்சி



*2023* செப்டம்பர் *12* அன்று கோரிக்கைகளை வலியுறுத்தி தென்காசி மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகம் முன்பு *400*க்கும் மேற்பட்ட தூய்மைப் பணியாளர்கள் கலந்து கொண்ட பெருந்திரள் முறையிடும் போராட்டம் நடை பெற்றது. இந்த நிலையில் தென்காசி மாவட்டம் செங்கோட்டை நகராட்சியில் *48* ஒப்பந்த தூய்மைப் பணித் தொழிலாளர்கள் இரண்டு ஆண்டுகள் முதல் எட்டு ஆண்டுகள் வரை பணி செய்து வருகின்றனர். செங்கோட்டை நகராட்சியில் ஏவிஎம் ஒப்பந்த நிறுவனத்திடம் பணி செய்த காலத்தில் பிஎப் மற்றும் இஎஸ்ஐ பிடித்தம் செய்யப்பட்ட தொகை தூய்மைப் பணித் தொழிலாளர்களுக்கு பல மாதங்கள் ஆகியும் வழங்கப் படவில்லை. பலமுறை ஒப்பந்த நிறுவன பொறுப் பாளர்களிடம் பேசியும் சரியான முடிவு ஏற்பட வில்லை. மேலும் தற்போது செயல்படும் ராம் அன் கோ மதுரை ஒப்பந்த நிறுவனம் தூய்மைப்பணி தொழிலாளர்களுக்கு பணி செய்ய போதுமான உபகரணங்கள் வழங்கவில்லை

அதேபோல் தென்காசி மாவட்ட ஆட்சித் தலைவர் அறிவித்த குறைந்தபட்சக் கூலி அரசாணையின்படி நாள் ஒன்றுக்கு ரூபாய் *511* சம்பளத்தை *2023* ஏப்ரல் *1* முதல் நிலுவையுடன் வழங்கிட வேண்டும். தொடர்ந்து பிடித்தம் செய்யப்படும் பிஎப் பணத்தை உடனடியாக பிஎப் அலுவலகத்தில் செலுத்திட வேண்டும் உள்ளிட்ட பல கோரிக்கைகளை வலியுறுத்தி ஏஐசிசிடியு சங்கம் சார்பாக மனு அனுப்பப்பட்டது. புதிய 13 பேட்டரி வண்டி மற்றும் ஒரு லோடு ஆட்டோ வண்டியை போராட்ட அறிவிப்பின் காரணமாக தொழிலாளர் களுக்கு அவசரமாக நகராட்சி நிர்வாகம் வழங்கியது. மற்ற கோரிக்கைகள் தொடர்பாக தனியார் ஒப்பந்த நிறுவனம் ராமன் அன் கோ நிறுவன மேலாளர், ஏஐசிசிடியு தென்காசி மாவட்ட நிர்வாகிகளை அழைத்து பேசினார். போராட்டம் வேண்டாம் பின்னர் பேசிக் கொள்ளலாம் என தட்டிக் கழிக்கப் பார்த்தார். சங்க நிர்வாகிகளின் ஊர்களுக்கு சென்று அவர்களின் சமூக பின்னணி சம்பந்தமாக விசாரித்தார் அவர்கள் வாழும் ஊரில் உள்ள ஆதிக்க சாதிகளை வைத்து பேசி மிரட்டிட ஏற்பாடு செய்தார் தொழிலாளிகளை ஒவ்வொருத்தரையும் தனித்தனியாக பேசி போராட்டத்தில் பங்கு பெறக் கூடாது என மிரட்டினார். ஆனாலும் அக்டோபர் 9 அன்று உள்ளிருப்பு போராட்டம் நடைபெற்றது. அதைத் தொடர்ந்து பேச்சுவார்த்தை நடைபெற்றது. அதில் தொழிலாளர்களின் பிஎப், இஎஸ்ஐ தொகையை ஒப்பந்த நிறுவனம் கட்டும் இல்லையென்றால் நகராட்சி நிர்வாகம் கட்டும், பணி செய்ய போதுமான உபகரண பொருட்கள் உடனடியாக வழங்கப்படும், தென்காசி மாவட்ட ஆட்சித் தலைவர் அறிவித்த குறைந்தபட்ச கூலி அரசாணையின்படி நாள் ஒன்றுக்கு ரூபாய் *511* சம்பளத்தை *2023* ஏப்ரல் *1* முதல் நிலுவையுடன் வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப் படும், ஆண் பெண் அனைத்து தொழிலாளர்களுக்கும் ரூபாய் 478 ஊதியத்தை ஒப்பந்த நிறுவன உரிமையாளரிடம் பேசி மூன்று நாட்களுக்குள் வழங்கிட ஏற்பாடு செய்யப்படும் என பல கோரிக்கைகளுக்கு எழுத்துபூர்வமாக உடன்படிக்கை ஏற்பட்டதை தொடர்ந்து அன்றைய போராட்டம் விலக்கிக் கொள்ளப்பட்டது.

ஆனால், உடன்படிக்கைப்படி நடந்து கொள்ளாதது மட்டுமின்றி, அது பற்றி முறையிட்ட சங்க நிர்வாகிகளிடம் ராமன் அன் கோ மேலாளர் திரு அசோக்குமார் சாதிய ரீதியாக அவதூறாகப்

பேசினார். அதனால், அவர் மீது உடன் நடவடிக்கை எடுக்கக் கோரி ஏஐசிசிடியு சங்கம் சார்பாக முற்றுகைப் போராட்டம் நடைபெற்றது. அதைத் தொடர்ந்து செங்கோட்டை நகராட்சி ஆணையாளர் மற்றும் மேலாளர் தொழிற்சங்க நிர்வாகிகளை பேச்சு வார்த்தைக்கு அழைத்தார்கள். பேச்சுவார்த்தையில் தனது உடல்நிலை சூழ்நிலையால் அவ்வாறு நடந்து கொண்டதாகவும் இனிமேல் அப்படி நடந்து கொள்ள மாட்டேன் என்றும் நடந்த தவறுக்கு வருத்தம் தெரிவித்துக் கொள்கிறேன் என்று அனைவரின் முன்பும் கேட்டுக் கொண்டதாலும் உடனடியாக கடந்த மாத சம்பளத்தை வழங்கியதாலும் முற்றுகைப் போராட்டம் விலக்கிக் கொள்ளப்பட்டது. போராட்டத்தில் ஏஐசிசிடியு தென்காசி மாவட்ட பொது செயலாளர் எம் வேல்முருகன், தென்காசி மாவட்ட தூய்மைப் பணியாளர் சங்க கௌரவத் தலைவர் பேச்சிமுத்து, தென்காசி மாவட்ட தூய்மை பணியாளர் சங்க மாவட்ட பொது செயலாளர் சுப்பிரமணியன், மாவட்ட பொருளாளர் பரமேஸ்வரி, ஏஐசிசிடியு தென்காசி மாவட்ட தலைவர் அயுப்கான், சேக் மைதீன், புதியவன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

## வாடிப்பட்டி ஒன்றியம்

மதுரை மாவட்டம் வாடிப்பட்டி ஒன்றியத்தில் உள்ள ஓர் ஊராட்சி மண்ணாடிமங்கலம். அந்த ஊரின் தூய்மைப் பணியாளர்கள் இருவருக்கு ஏறக்குறைய 16 மாதங்கள் சம்பள பாக்கி. அவர்கள் மலை குறவர் என்ற அட்டவணைச் சாதியைச் சேர்ந்தவர்கள். இருவரும் வருகைப் பதிவேட்டில் கையொப்பமிடவில்லை என்பதால் சம்பளம் வழங்கப்படவில்லை. உண்மையில் அந்த இருவருடன் இன்னொருவரும் கையொப்பமிடுவது முறையாக நடக்க வாய்ப்பில்லை. அவர்கள் வேலையை முடித்துவிட்டு பிரதான கிராமத்தில் இருக்கும் பஞ்சாயத்து அலுவலகத்துக்கு வந்து சேர்வது, அப்போது அலுவலகம் மூடியிருப்பது, பதிவேடு இல்லாதிருப்பது என்று பல பிரச்சனைகள்.

சம்பளப் பாக்கி கேட்டு வட்டார வளர்ச்சி அதிகாரி (கி) அவர்களை அணுகியபோது, வேலை செய்யாத நாட்களுக்கு சம்பளம் இல்லை என்ற பதில் வந்திருக்கிறது. தொழிலாளர்கள் வலியுறுத்திய பின்னர் துணை வட்டார வளர்ச்சி அதிகாரி ஒருவர் கிராமத்தை ஆய்வு செய்து தொழிலாளர்கள் முறையாக வேலை செய்வதில்லை என்று அறிக்கை செய்தார். இது உள்ளாட்சி நிர்வாகமும், வட்டார வளர்ச்சி அதிகாரிகளும் கூட்டு சேர்ந்து செயல்படுவதின் விளைவு. தொழிலாளர்கள் தாங்கள் வேலை செய்யும் வார்டுகளில் வீட்டுக்கு வீடு கையொப்பம் வாங்கி தாங்கள் தொடர்ந்து வேலை செய்து வருவதை நிரூபித்திருக்கின்றனர். பின் மாவட்ட ஆட்சியர் உள்ளிட்ட அதிகாரிகளுக்கு மனு அளித்திருக்கின்றனர். சில சங்கங்களை அணுகியிருக்கின்றனர். அப்படியிருந்தும் பிரச்சனை தீரவில்லை என்பதால் ஏஐசிசிடியு அலுவலகத்துக்கு வந்தனர். அந்த ஊராட்சியின் தலித் மக்கள் வாழும் பகுதிகளையும் தூய்மைப்




பணியாளர்களையும் சங்கத்தினர் சந்தித்தார்கள். அருந்ததிய மக்களும் மலை குறவர்களும் தூய்மைப் பணியில் இருக்கின்றனர். அருந்ததி இன தொழிலாளர்கள் பலரும் பழங்குடி தொழிலாளர்கள் எதிர்கொள்வது போன்ற பிரச்சனைகளை எதிர்கொள்கின்றனர்.

இதற்கு கிராமப்புற ஊராட்சி தலைவர்/ பிரதிநிதிகள்/ அலுவலர் மற்றும் மாவட்ட ஊராட்சி நிர்வாகத்தில் ஊடுருவி இருக்கும் சாதியப் பார்வை மிக முக்கியமான காரணம். மேல் கீழ் எனும் அணுகுமுறை அனைத்து மட்டங்களிலும் பரவியிருந்தது.

தொழிலாளர்களின் கோரிக்கையை வட்டார வளர்ச்சி அதிகாரி முதல் ஒன்றிய அரசின் தூய்மைப் பணியாளர்கள் வாரியம் வரை கொண்டு சென்று தீண்டாமை வன்கொடுமையைத் தடுக்க வேண்டும் என்று கோரப்பட்டது. அதன் விளைவாக, வேறொரு பிரச்சனைக்காக நடந்த ஆர்ப்பாட்டத்திற்குப் பின்பு அதிகாரிகளைச் சந்தித்து வாதாடிய பின்பு 3 மாத சம்பளம் விடுவிக்கப்பட்டது. ஆனாலும், மூன்று மாதங்கள் பிரச்சனை நீடித்தது. ஊராட்சி செயலாளரைக் குறிவைத்து, தீண்டாமை

வன்கொடுமை என்று குற்றஞ்சாட்டும் சுவரொட்டிகள் வெளியாகின. அதன் பின்பு நடந்த பேச்சுவார்த்தையிலும் அதிகாரிகள், "கையொப்பம் இடாத தொழிலாளிக்கு எப்படி சம்பளம் அளிப்பது", என்று கேள்வி எழுப்பினர்.

“சார் நீங்கள் கையொப்பம் இட வரும்போது, அங்கே வருகைப் பதிவேடு இல்லாது போனால் என்ன செய்வீர்கள்? நீங்கள் கையொப்பம் இடும் பதிவேட்டுக்கும் உங்களுக்கும் எவ்வளவு தூரம்?” என்று சங்கத்தினர் பதில் கேள்வி எழுப்பினர். அதிகாரிக்குப் புரியவில்லை. "இவர்கள் கையொப்பம் போட பயணம் செய்ய வேண்டும். அதிகாரி வரும்வரை காத்திருக்க வேண்டும். இதற்குக் காரணம் சாதியில்லையா?" என்று கேட்ட பின்னர் பிரச்சனை முடிவுக்கு வந்தது. தீண்டாமை வன்கொடுமைக்கு ஊராட்சி நிர்வாகத் துறை மௌனமாகத் துணை போகிறது என்று முகத்துக்கு நேரே சொன்ன பிறகு நிர்வாகம் இறங்கி வந்தது.

அந்தத் தொழிலாளர்கள் பணியாற்றும் வார்டிலேயே பதிவேட்டை வைக்கவும் பாக்கியுள்ள சம்பளத் தொகையை ஒவ்வொரு மாதச் சம்பளத்துடன் 3 மாத நிலுவைத் தொகையைச் சேர்த்து வழங்கி நிலுவைச் சரி செய்யவும் ஊராட்சி நிர்வாகம் ஒப்புக்கொண்டது. இதற்கான ஒப்பந்தத்தில் ஊராட்சி நிர்வாகமும், தொழிலாளர்களும் ஏஐசிசிடியு தூய்மைப் பணியாளர் சங்க அமைப்பாளர் ஈஸ்வரி முன்னிலையில் கையொப்பமிட்டனர். இந்தப் போராட்டத்தை எடுத்துச் செல்வதில் மாவட்ட குழு உறுப்பினர்கள் சண்முகம், மங்கையர்க்கரசி, முத்துராக்கு உள்ளிட்டோர் முக்கிய பங்காற்றினர்.

## கோவை மாநகராட்சி



கோவை மாநகராட்சியில் தூய்மைப் பணித் தொழிலாளர்கள், ஓட்டுநர்கள், கிளீனர்கள் மற்றும் டிபிசி தொழிலாளர்களுக்கு அரசு நிர்ணயம் செய்த குறைந்தபட்சக் கூலியை வழங்க வேண்டும் என வலியுறுத்தி அக். 20 அன்று வேலைநிறுத்தப் போராட்டம் துவங்கியது. தொடர்ந்து 6 நாட்கள் வேலைநிறுத்தப் போராட்டம் நடைபெற்றது. இதில் ஏஐசிசிடியு உட்பட 11 தொழிற்சங்கங்கள் கலந்து கொண்டனர். முதல் இரண்டு நாட்கள் தொழிலாளர் ஆணையாளர் அலுவலகத்தில் நடைபெற்ற பேச்சுவார்த்தை தோல்வியில் முடிந்தது. வேலைநிறுத்தப் போராட்டத்தின் 6வது நாள் அன்று காலை கோவை மாவட்ட ஆட்சியர் அலுவலகம் முன்பாக ஆயிரத்திற்கும் மேலான தொழிலா ளர்கள் கலந்து கொண்ட ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. மாவட்ட ஆட்சியரிடம் குறைந்தபட்ச ஊதியம், ஒப்பந்தத் தொழிலாளர் சட்டம் மற்றும் சம வேலைக்கு சம ஊதியம் என எந்த சட்டத்தையும் பின்பற்றாத கோவை மாநகராட்சி நிர்வாகம் மீது கொத்தடிமை ஒழிப்பு சட்டத்தின் கீழ் நடவடிக்கை எடுக்க வேண்டும் என கடிதம் கொடுக்கப்பட்டது. இறுதியாக அன்று மாலை தொழிலாளர் ஆணையர் அலுவலகத்தில் நடைபெற்ற பேச்சுவார்த்தையில் கோவை மாநகராட்சி துணை ஆணையர் அரசு நிர்ணயம் செய்த குறைந்தபட்சக் கூலியை வழங்குவதாக உறுதியளித்து கையெழுத்திட்டதன் பேரில் உடன்பாடு ஏற்பட்டதைத் தொடர்ந்து வேலைநிறுத்தம் முடிவுக்கு வந்தது.

6 நாட்களாக நடைபெற்ற போராட்டத்தில் தொழிலாளர்கள் ஒற்றுமை உணர்வுடன் உறுதியாக இருந்தார்கள். மதியம் உணவு போராட்டக் களத்திலேயே சமைக்கப்பட்டு அனைவருக்கும் வழங்கப்பட்டது. போராட்டம் வெற்றி பெற பெண் தொழிலாளர்களின் பெருமளவிலான பங்கேற்பு, உறுதிப்பாடு, ஒற்றுமை மிக முக்கியமானது. ❑

## ஏஐசிசிடியு சேலம் மாவட்ட 4 வது மாநாடு




சேலம் மாவட்ட ஏஐசிசிடியு 4 வது மாவட்ட மாநாடு 29.10.23 அன்று நடைபெற்றது. ஏஐசிசிடியு மாநில பார்வையாளராக மாநிலத் துணைத் தலைவர் பாலசுப்பிரமணியன் கலந்து கொண்டார். வேலை அறிக்கையை ஆர்.வேல்முருகன் முன்வைத்தார். சில ஆலோசனைகளுடன் அறிக்கை ஏற்றுக் கொள்ளப்பட்டது. பின்னர் 17 பேர் கொண்ட மாவட்டக் குழு தேர்வு செய்யப்பட்டது. மாவட்டத் தலைவராக தோழர் பாலு, மாவட்டச் செயலாளராக ஆர். வேல்முருகன், பொருளாளராக தோழர் ஏ. வேல்முருகன் தேர்ந்தெடுக்கப்பட்டனர். இகக(மாலெ) மத்தியக் குழு உறுப்பினர் தோழர் சந்திரமோகன் மற்றும் மாநிலக் குழு உறுப்பினர் தோழர் அய்யந்துரை வாழ்த்துரை வழங்கினர்.

## ஏஐசிசிடியு வேலூர் மாவட்ட முதல் மாநாடு



ஏஐசிசிடியு தொழிற்சங்கத்தின் வேலூர் மாவட்ட முதலாவது மாநாடு 25.10.2023 அன்று நடைபெற்றது. தோழர்கள் ஏ.ஏழுமலை, ஆர்.பாத்திமா, எஸ்.மகேஸ்வரி, ஏ.மாணிக்கம், ஆர்.கவிமித்ரன் ஆகிய ஐந்து பேரைக் கொண்ட தலைமை குழு மாநாட்டை வழி நடத்தியது. மாநாட்டு கொடியை தோழர் ஆர்.பாத்திமா ஏற்றினார். தோழர் எம்.திருக்குமரன் அஞ்சலி தீர்மானத்தை முன் வைத்தார். தோழர் ஏ.மாணிக்கம் வரவேற்புரை நிகழ்த்தினார். ஏஐசிசிடியு மாநில சிறப்புத் தலைவர் தோழர் சொ.இரணியப்பன் மாநாட்டைத் துவக்கி வைத்து பேசினார். மாவட்டச் செயலாளர் தோழர் சீ.அ.சிம்புதேவன் வேலை அறிக்கையை முன்வைத்தார். வேலூர் இகக(மாலெ) மாவட்டச் செயலாளர் தோழர் எம்.சரோஜா, ஏஐசிசிடியு மாநில துணைத் தலைவர் தோழர் கே.எஸ்.சதீஷ், மாநில செயற்குழு உறுப்பினர் தோழர் எம்.காந்தி மற்றும் தோழர்கள் வாழ்த்துரை வழங்கினார்கள். மாநாட்டில் 21 பேர் கொண்ட மாவட்ட பொது குழு தேர்வு செய்யப்பட்டது. மாவட்டப் பொது குழுவில் இருந்து 9 பேர் கொண்ட மாவட்ட நிர்வாகிகள் தேர்வு செய்யப்பட்டனர். கௌரவத் தலைவராக பா.சந்திரசேகர், தலைவராக ஏ.ஏழுமலை, மாவட்டப் பொதுச் செயலாளராக சீ.அ.சிம்புதேவன், பொருளாளராக ஆர்.பாத்திமா தேர்வு செய்யப்பட்டனர். ஏஐசிசிடியு அகில இந்திய துணைத் தலைவர் தோழர் சோ.பாலசுப்பிரமணியன் சிறப்புரையாற்றினார். தோழர் ஏ.உமாபதி நன்றி கூறினார். ❑

# ஏஐசிசிடியு சென்னை மாவட்ட 6வது மாநாடு






*சென்னை பெருநகர 6வது மாவட்ட மாநாடு 29.10.2023 அன்று வண்டலூரில் நடைபெற்றது. மாநாட்டின் துவக்கமாக ஏஐசிசிடியு கொடியை அகில இந்திய முற்போக்கு பெண்கள் கழக மாநிலக்குழு உறுப்பினர் தோழர் கிருஷ்ணவேணி ஏற்றினார். தோழர்கள் ஆபிரகாம், சிவா,கௌசல்யா, மதன், அரிதாஸ் ஆகியோர் மாநாட்டுக்கு தலைமை தாங்கினர். தொழிலாளர் வர்க்கத்திற்காக தன் வாழ்க்கையை அர்ப்பணித்து மறைந்த தோழர் எஸ்.அன்சர்பாஷா படத்தை இகக(மாலெ) மாநிலச் செயலாளர் தோழர் பழ.ஆசைதம்பி திறந்து வைத்து துவக்கவுரையாற்றினார். தோழர் அன்சர் குடும்பத்தினரும் மாநாட்டில் கலந்து கொண்டனர். தியாகிகளுக்கு நினைவஞ்சலி செலுத்தி மாநாடு துவங்கியது. மாநாட்டு அறிக்கையை மாவட்டப் பொறுப்பாளர் தோழர் சொ.இரணியப்பன் முன்வைத்தார். அறிக்கை மீது தோழர்கள் கருத்துரை வழங்கினார்கள். மாநாட்டு பார்வையாளரும் ஏஐசிசிடியு மாநிலச் செயலாளருமான தோழர் முருகன் சிறப்புரையாற்றினார். தொடர்ந்த 35 பேர் கொண்ட மாவட்டக்குழு தேர்வு செய்யப்பட்டது. மாவட்டத் தலைவராக தோழர் அ.ஆபிரகாம், பொதுச் செயலாளராக தோழர் எம்.பாலாஜி, பொருளாளராக தோழர் ஸ்ரீதர் ஆகியோரை உள்ளடக்கிய 13 பேர் நிர்வாகக் குழு தேர்வு செய்யப்பட்டது. ஏஐசிசிடியு அகில இந்திய துணைத் தலைவர் தோழர் சோ.பாலசுப்பிரமணியன் நிறைவுரையாற்றினார்.*

# இகக(மாலெ) தஞ்சை மாவட்ட சிறப்பு மாநாடு




*இகக(மாலெ) தஞ்சை மாவட்ட, மாநகர, ஒன்றிய, கிளைச் செயலாளர்களின் சிறப்பு மாநாடு 22.10.2023 அன்று நடைபெற்றது. கூட்டத்தில் மாவட்டச் செயலாளர் தோழர் கண்ணையன், மாநிலக்குழு உறுப்பினர் தோழர் குணசேகரன் உள்ளிட்ட தலைவர்கள் கலந்து கொண்டனர். கூட்டத்தில் மோடி அரசின் இஸ்ரேல் ஆதரவு நிலைக்குக் கண்டனம் தெரிவிக்கப்பட்டது. இகக(மாலெ) மாநிலச் செயலாளர் தோழர் பழ.ஆசைத்தம்பி கலந்து கொண்டு சிறப்புரையாற்றினார். தீப்பொறி சந்தா சேர்ப்பு இயக்கத்தின்போது முடிவு செய்யப்பட்ட 150 சந்தாக்களுக்கான முகவரி மற்றும் சந்தா தொகை மாநிலச் செயலாளரிடம் வழங்கப்பட்டது.* ❑

## விசிக முதன்மைச் செயலாளர் உஞ்சை அரசன் மறைவுக்கு இககமாலெ ஆழ்ந்த இரங்கல்!



*இளம் வயதிலேயே புரட்சிகர கருத்துகளில் ஈர்ப்பும் ஈடுபாடும் கொண்ட விசிக முதன்மைச் செயலாளர் தோழர் உஞ்சை அரசன் திடீர் மறைவு அதிர்ச்சி அளிக்கிறது. மார்க்சிய-லெனினிய சிந்தனையாலும் செயல்பாடுகளாலும் நன்கு அறியப்பட்ட தோழர் உஞ்சை அரசன், மார்க்சிய-லெனினிய இயக்கத்தின் ஊக்கமிக்க செயல்வீரராகவும் பின்னர் விடுதலை சிறுத்தைகள் கட்சியின் களப்போராளியாகவும் செயல்பட்டவர். மார்க்ஸ்-அம்பேத்கர்-பெரியார் சிந்தனை வழியில் தலித் விடுதலை, சமூகநீதி, சாதி ஒழிப்பு, சனாதன எதிர்ப்பு அரசியலில் தன்னை முழுவதுமாக ஈடுபடுத்திக் கொண்டவர். அரசியல் களத்தில் மட்டுமின்றி கலை இலக்கியத் தளத்திலும் தனது முற்போக்கு கருத்துகளை அழுத்தமாக முன்னெடுத்தவர். பாசிச-ஆர்எஸ்எஸ்-பாஜகவுக்கு எதிரான போர்க்களத்தில் ஒரு சக போராளியை இழந்திருப்பது சொல்லொணா வருத்த மளிக்கிறது. அவரது பிரிவால் துயரமடைந்துள்ள விடுதலை சிறுத்தைகள் கட்சி தலைவர் தொல். திருமாவளவன் உள்ளிட்ட நிர்வாகிகள், தொண்டர்கள், குடும்ப உறுப்பினர்களுக்கு, இந்திய கம்யூனிஸ்ட் கட்சி (மார்க்சிஸ்ட்-லெனினிஸ்ட்), தனது ஆழ்ந்த இரங்கலை தெரிவித்துக் கொள்கிறது.*

*31.10.2023 அன்று சென்னையில் தோழர் உஞ்சை அரசனின் நினைவேந்தல் நிகழ்ச்சியில் இகக(மாலெ) மாநிலச் செயலாளர் தோழர் பழ.ஆசைத்தம்பி கலந்து கொண்டு தனது நினைவுகளைப் பகிர்ந்து கொண்டார்.*

## இந்திய கம்யூனிஸ்ட் கட்சி அலுவலகம் மீது தாக்குதல்: இகக(மாலெ) கடும் கண்டனம்!

*இந்திய கம்யூனிஸ்ட் கட்சி மாநில அலுவலகமான 'பாலன் இல்லம்' மீது தாக்குதல் நடந்திருப்பது அதிர்ச்சி அளிக்கிறது. இந்தத் தாக்குதலை இந்திய கம்யூனிஸ்ட் கட்சி (மார்க்சிஸ்ட்-லெனினிஸ்ட்) வன்மையாகக் கண்டிக்கிறது.*

*ஆளுநர் மாளிகை மீது தாக்குதல் என்று குற்றச்சாட்டு பற்றி ஆளுநரும் அண்ணாமலையும் எழுப்பும் கூக்குரலுக்கும் இந்த தாக்குதலுக்கும் தொடர்பு இருக்குமோ என்ற சந்தேகத்தை எழுப்புகிறது.*

*கட்சி அலுவலகங்கள், முக்கிய இடங்கள் மீது தாக்குதல் என்ற பெயரால் சட்டம் ஒழுங்கு கெட்டுவிட்டது என சச்சரவு, பதட்டத்தை எழுப்ப அமைதி, நல்லிணக்கத்துக்கு எதிரான சக்திகளால் இத்தகைய தாக்குதல்கள் தூண்டிவிடப்படுகிறதோ என்ற அய்யத்தை ஏற்படுத்துகிறது. சமீபத்திய இரண்டு தாக்குதல்களில் தொடர்புடையவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர். ஆயினும் இந்த தாக்குதல்களுக்கு பின்னுள்ள சக்திகளை அடையாளம் கண்டு தனிமைப்படுத்திட வேண்டுமென அரசை இகக(மாலெ) மாநிலக் கமிட்டி வலியுறுத்துகிறது. அரசியல் கட்சி அலுவலகங்கள், உள்ளிட்ட முக்கிய அலுவலகங்களுக்கு உரிய பாதுகாப்பை வலுப்படுத்திட வேண்டுமென்றும் வலியுறுத்துகிறது.*

**பழ.ஆசைத்தம்பி**
**மாநிலச் செயலாளர்**
**இகக(மாலெ)**

MALAE THEEPORI. Registered with Registrar of NewsPaper for India TN/TAM/2002/12013
Posted on 05.11.2023 at Egmore RMS/1 Patrika Channel Regn No:TN/CCN/368/2021-2023
Published on 1st and 16th of every month R.DIS: 2804/17 Licensed to Post WPP TN/PMG/(CCR)/WPP-436/2021-2023

# இஸ்ரேலே! பாலஸ்தீனத்தின் மீதான போரை நிறுத்து!!










Owned and Published bys; S.Balasundaram from 1/10, 11th street, Karunanidhi Nagar, Ayanavaram, Chennai - 600023
Printed by R.Murugan at Print Point, 10, Pulipone Bazar 2nd Lane, Triplicane, Chennai - 600005. Editor G.Ramesh